# திருமூலர் திருமந்திரம்

(தேர்ந்தெடுத்த பாடல்கள்)

**Specially Selected Verses from Thirumanthiram**

**- the Book of knowledge that reveals the Super Power within Man -**

**WITH ENGLISH TRANSLATION**

(மூலமும், உரையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்)

S. இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTRODUCTION

**Miss.K. Kumarasinkam, B,Sc(Econ) London.**

Placed tenth in sequence in the standard classification of Tamil spiritual literary works called "Thirumurais",which number twelve in all,the work Thirumanthiram must belong to a period earlier than that which has been assigned to it in this classification. Having been discovered after a long period of concealment, Thirumanthiram had not received the same attention from scholars, academics,and the erudite resulting in no proper evaluation of its content or time period being made as was with the more popular relegious works of later periods,thus relegating this profound sacred work to the tailend of the Thirumurais. Thirumanthiram, the hidden treasure. held within its 3000 verses much spiritual wealth and cosmic knowledge that it forms the conceptual substratum of Saivaism.

Thirumoola Munivar, a cosmic personality, is known to be one of the eight disciples of the great Nandhi also called Nandeeswar and Nandikeswar along with Sage Pathanjali who composed Yoga Sutra. Nandhi illumined his desciples with divine wisdom and knowledge. The bull or 'vidai' found in most Saiva temples from time immemorial to this day, is the representation of the atmic power and is called Nandi This being so, as it was the great preceptor Nandi, who conferred spiritual wisdom and knowledge of the life-force or Atmic power on his eight famous disciples who in turn carried this knowledge to the far corners of the Indian sub- continent. Thirumoola Munivar authored a 3000 verse composition enshrining his spiritual knowledge earned, learned and experienced under the tutelage of the great Nandi.

Distinct from the other religious and spiritual compositions in Tamil, which are essentially sweet outpourings of individual divine experience, Thirumanthiram not only speaks of the beauty of spiritual self realisation,but also spells out the way to its attainment. Therefore Thirumanthiram is a sastra as well as a stotra. Spiritual experience is combined with spiritual science in this work of tremendous value.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The discerning mind is able to recognise two dominant aspects to this great work on cosmic knowledge. First,that cosmic comprehension and knowledge in man proceeds from the primal creative force, AUM which divine conciousness impregnates and sustains all phenomena with life. This is the concept that forms the foundation of Thirumanthiram. AUM is the creative sound matrix that sustains the visible phenomena in its multifarious nature. The dictum "Seevan Sivan" means, life consciousness in all beings has its source in divine conciousness. This definitely furnishes an original aspect to the phenomenon of thought in man whereas the principles of mechanism are fundamental to Western Philosophy begining with the influential Philosopher Descartes.

To the Western mind, thought is the begining and end of philosophy with the physical sciences providing illuminating insights into the workings of external phenomena. Thirumoolar in his Thirumanthiram clearly reveals that the workings of the physical, emotional, mental and the intellectual perceptions have their source in the dynamic comic consciousness of the divine. These perceptions are essentially limited perceptions and truth lies in experiencing total perception which is realising the creative consciousness manifesting in man at its complete level, which realisation the Munivar calls real evolution. The second dominant aspect in Thirumanthiram is the manner in which the earnest aspirant may set about effecting this evolution of achieving total realisation of the cosmic consciousness flowing within him. An eight-fold disciplining of the aspirant with meditation as the final stage of the spiritual regimen receives lucid and precise treatment in this monumental work.

Thirumoola Munivar is a cosmic giant communicating his knowledge and experience of the divine through this 3000 verse composition. There is no sense of ambiguity or intangibility in the manner of expressing the most profound. A truly realised soul sends out his fund of knowledge and experience to the world. Mystical experience does not stop only with the expression of brimming joy but flows on as mystical science of precision and beauty.

Thirumanthiram, owing to its long concealment and subsequent neglect had not received the same attention and other Saiva compositions gained favour in the Tamil mind. But in the last two decades, this work has received much attention and its powerful verse expression of the cosmic and the spiritual comprehended to a great extent. Also there is an urge among the Saiva public to know more about Thirumanthiram.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One of the earliest to spearhead the rousing of interest in this ancient work is SriRamanathan. He has been deeply immersed in the study of Thirumanthiram for over two decades, and his untiring endeavour through the written and spoken word has made the scholarly and lay world get acquainted with this rare composition. His original research and work on Thirumanthiram have been received with regard by scholars in India and elsewhere. The subtle meanings that lie behind the four-lined stanzas have been decoded and made accessible by him to the average lay mind. This publication has been largely made possible by his writings and lectures.

He has delved deep into the spiritual ocean of Thirumanthiram and brought out gems of spiritual truth. Seekers of spiritual knowledge have benifitted immensely by the sublime effort made by him to make the profound text of Thirumanthiram intelligible to all. The fund of mystical and cosmic knowledge has been swelled by a greater understanding of this long-hidden treasure. In harnessing the inner meanings in this profound composition, Sri.Ramanathan has placed the seekers of truth much in his debt. Although, it is only the posterity who will be in a position to evaluate the true nature of his studies on Thirumanthiram along with other works of similar nature, those who have listened and read his expositions of Thirumanthiram cannot underrate his depth of understanding,which he has been able to communicate lucidly and thereby giving glimpses of meaning touching them and drawing them into a greater understanding of Thirumanthiram.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

( திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம் )

தன்னைத்தான் அறிவதே உண்மை அறிவாகும். அந்த அறிவை அறிந்தால் மட்டுமே உண்மையான இன்பத்தைப் பெறலாம். அதுவே மனித வாழ்வின் குறிக்கோளாகும். அதைப் பெறும் வழியைத் திருமூலர் 3000 திருமந்திரங்களினால் விளக்கியுள்ளார். ஆத்மீகத்தைச் சாதாரண மொழியில் வெளிப்படுத்த முடியாது. அது அனுபவ ஞானிகளின் தனி மொழியாகும். அறிவை அறிவாலேதான் அறிய முடியும். திருமந்திரம் , ஆத்மீகப் பரிணாம வளர்ச்சிப் பாதையில் வெவ்வேறு படிகளில் உள்ள அனைவருக்கும் அவரவர் நிலைக்குத் தக்கபடி ஆத்மீகப்பாதையில் முன்னேற அவர்களுக்குக் கைகொடுத்து உதவுகிறது. இந்த அரிய ஞானக்களஞ்சியத்தைத் தமிழ் மக்கள் பயன் படுத்த முடியாதவாறு மறைத்து வைக்கப்பட்டிருந்தமை பெரும் துரதிஷ்டமாகும். புறவழிபாடே தஞ்சம் என்ற எண்ணத்தில் ஊறிப்போய் எம்மவர் திசை தடுமாறி அலையும் அவலத்தைக் கண்கூடாகக் கண்டு , கவலைப்பட்டு அதைப் போக்கும் பேரவாவினால் உந்தப்பட்டு "இலங்கை அறிஞர்" என்று இந்தியப் பேரறிஞர்களால் போற்றப்படும் திரு. எஸ்.இராமநாதன் அவர்கள் 3000 திருமந்திரங்களில் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து தொகுத்து முதலாம் இரண்டாம் மூன்றாம் பாகங்களாக வெளியிட திருவருள் கூடியுள்ளது அவற்றை அறியும் ஆத்மீகக் குறிப்புக்களையும் தந்திருக்கின்றார். மறைபொருளை மறைமுகமாகவே கூறமுடியும் என்பதைத் திருமந்திரம் எடுத்துக் காட்டுகிறது. திருமந்திரம்எல்லாராலும் விளங்கிக் கொள்ள முடியாது என்ற குறைபாட்டை இந்நூல் ஓரளவுக்காவது நீக்கும் என்ற நம்பிக்கையின் தூண்டுதலே இம் முயற்சிக்கு காரணமாகும். பாசத்தில் அகப்பட்டுப் பதைக்கும் மக்களுக்குச் சமய சஞ்சீவியாக இந்நூலிற் காணும் திருமந்திரங்கள் உதவ வல்லன என்பது எனது சொந்த அனுபவமாகும். இதனை எல்லோரும் அறிந்து பயன் பெறவேண்டும் என்பதே இந்த ஞானதானியின் வேணவா வாகும். எல்லாத்தானங்களிலும் தலை சிறந்த தானம் அறிவுத்தானமாகும். அன்னதானம் உடலுக்கு ஊட்டமளிப்பது அறிவுத்தானம் உயிருக்கு ஊட்டமளிப்பது. இக் கருத்துக்கள் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன.

"மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ்
ஞாலமறியவே நந்தி யருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடில்
ஞாலத்தலைவனை நண்ணுவரன்றே"

இந்த மூவாயிரம் பாடல்களில் விரும்பிய ஒரு சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து. அவற்றின் கருத்தறிந்து ஓதி உணர்தலை வாழ்வின் நோக்காகக் கொண்டு பயிற்சி செய்தல் அவசியமாகின்றது. எத்தனையோ பிறவிகள் எடுத்து இளைத்தபின் எமக்குக் கிடைத்தற்கு அரிய மானிடப் பிறவி கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு உயிருக்காக ஏற்பட்டது. உயிர்போனதும் அது ஒன்றுக்கும் உதவாத பிணமாகிவிடுகிறது. எனவே உயிரைப்பற்றிய அறிவே முக்கியமாகின்றது. " உடல் உயிர் உண்மை ஓர்ந்துணராதார் கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே " என்கிறது திருமந்திரம். உயிரைப்பற்றிய அறிவு ஏற்பட்டதும் நித்திய, அநித்திய விவேகம் ஏற்பட்டு விடும். அந்த விவேகம் ஏற்பட்ட பின் உலகம் துன்பத்கேணியாகத் தோன்றாது. யோகர்சுவாமி அவர்களின் வாக்குப்படி இது நல்ல உலகமாய் விடும் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கும் எமது சொந்த அனுபவம் ஆகிவிடும். எனவேதான் இந்த உயிர் உடலில் "நிற்கின்றபோதே நிலை உடையான் கழல் கற்கின்ற செய்மின், கழிந்தறும் பாவங்கள்" என்கின்றார் திருமூலர். பாவங்கள் தான் பிறவிப் பிணிக்குக் காரணம் பிறவிப்பிணி நீங்கவேண்டுமானால் பாவங்கள் அழிந்தொழிய வேண்டும். அதற்கு "ஐந்தெழுத்துப் புணை பிடித்துக் கிடந்து" ஆத்ம ஓட்டத்தை அறியவேண்டும். இதுவே நாம் அறியவேண்டிய அறிவாகும். "சிவன் சிவன் " என்று முன்னைப் பெரியோர் மொழிந்ததை நாம் தேர்ந்து கொள்ளின் ஒரு பொல்லாப்பும் இல்லை. உள்ளம் தெளிவாகிவிடும். ஊன்உடம்பு ஆலயமாகும்.

ஊன் பற்றிநின்ற உணர்வுறு மந்திரத்தை ( ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை) இறுகப்பற்றிக் கொண்டால் வான்பற்றிநின்ற மறைபொருள் தன்னாலே வெளிப்பட்டு சாததனுக்கு அளவிலா ஆனந்தத்தைக் கொடுக்கும் அந் நிலைக்கு இட்டுச் செல்ல இந்நூல் அனைவரையும் அழைக்கின்றது. அவ்வழி அடைந்து உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உலகில் அறிவாகவும் மெய்ப்பொருளாகவும் வேதப்பொருளாகவும் நிற்கும் பொருள் எமக்குள் ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் பொருள். அப்பொருளால் படைக்கப்பட்ட மற்ற எல்லாப் பொருள்களும் அழியும் தன்மையுள்ள சடப்பொருட்களாம், தன்னை, தனக்குள் தான் கூறும் அறிவுப்பொருளை அறிந்து ஓதித் தன்னை அறிவதுவே அறிவாகும். திருமூலர் திருமந்திரமென்னும் அரும்பெரும் ஆகம நூலை அண்ணிநிற்கும் அண்ணல் அருளால் அருளிச் செய்ததாகவும் அண்ணல் அறையும் அறிவை அறியாவிட்டால் அவ்வாகமும், தொகுப்புக்களும் நீர்மேல் எழுத்துப்போல ஒரு பிரயோசனமும் இல்லையென்று பின்வரும் திருமந்திரத்தால் கூறுகின்றார்.

அண்ணல் அருளால் அருளுமிவ்வாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடுமாயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே 64

அண்ணல் அறையும் அறிவாவது ஆத்மா இயங்கி ஒலிக்கும் ஐந்தெழுத்து மந்திரமாகும். இவ்வைந்து எழுத்துக்களையும், அகாரம் இகாரம், உகாரம் ஓங்காரம் மகாரமென்று நந்தியின் சீடர்களான பதஞ்சலி தமது யோகசூத்திரத்திலும் , திருமூலர் தமது திருமந்திரத்திலும் கூறியிருக்கிறார்கள்.

இதுவே இறைவனின் நாமமென்றும், திருநாமமென்றும், சிவாயநம என்றும் நமசிவாய என்றும் எமது முன்னோர் ஆயிரம் பேர் கொடுத்தார்களென்று திருமந்திரம் கூறுகின்றது.

"பேராயிரமுடைய் பெம்மான் பேர் ஒன்றினில்
அருட்கடல் ஆடுக என்றானே"

உலகில் உள்ள அத்தனை கோடி மக்களும், தனிப்பொருளாகிய இறைவனுக்கு ஆயிரக்கணக்கான பெயர்கள் கொடுத்து பல சமயங்கள் அமைத்து வணங்கினாலும் அவன் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தில் ஓமெனும் முப்பதத்திலேயே இருக்கின்றான். எல்லாத் தத்துவ ஞானிகளுக்கும் முப்பதத்தில் ஓடும் பிராணவாயுவைப் பற்றி நின்றே வீடு பெற்றார்கள். யேசுக்கிறீஸ்து நாதர், புத்தபெருமான், அண்ணல் நபி முகம்மது, மற்றும் எல்லாயோகிகளும் ரிஷிகளும் தவமிருந்து, தங்களுக்குள் இயங்கின மெய்ப் பொருளான உட்பொருளையே உணர்ந்தார்களென்பது வெளிப்படை.

எமது உடம்புக்குள் இயங்கும் கருவில் மிதித்த கமலப்பாதமான அகார எழுத்திலிருந்து விரிந்த ஐந்தெழுத்தில் ஓடும் உயிரையே சீவன், பிராணன் பிரணவப் பொருள், ஆத்மா என்று பலவாறாகக் கூறுவர். ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி ஆத்மாவை அறிந்து உணர்வதுவே அறிவாகும். இறைவனை அல்லாத மற்ற அறிவெல்லாம் பேய் அறிவு என்கிறார் திருமூலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன்னை அறிவது அறிவாகும் அஃதன்றி
பின்னை அறிவது பேய் அறிவாகும்"

இக்கருத்தையே எமது வேதநூல்களும். உபநிடதங்களும். பகவத்கீதையும் திருமந்திரமும் இன்னும் பல தத்துவ ஞானிகள் அருளிச் செய்த நூல்களும் கூறுகின்றன. திருவள்ளுவரும்,

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற் தாள் தொழாரெனின்

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது

கருவில் மிதித்த கமலப்பாதத்தையே திருவடி, சேவடி, இணையடி, திருப்பாதம், பூங்குழல் எனப் பலவாறாகத் திருமந்திரம் கூறுகின்றது. இப்பாதத்திலிருந்து எழுந்து, ஐந்தெழுத்தாய் விரிந்து, இயங்கும் பொருளே எமது உயிராய் நிற்கின்றது. உடம்புக்குள் இப்பொருளின் ஒட்டமே ஓமெனும் இறை நாமத்தை சிவாயநம எனப்படும் சிவனின் நாமத்தை இடைவிடாது கூறிக்கொண்டு எம்மை உயிர்வாழச் செய்கிறது.

உயிர் இயங்கும் ஐந்தெழுத்தையே நந்தியின் மற்றொரு சீடரான பதஞ்சலி யோகசூத்திரம் என்னும் நூலில் பஞ்சாட்சரம் என்று குறிப்பிட்டுள்ளார் இவ் வைந்தெழுத்தும் ஓடும் வழி வழியே எம்மனத்தைப் பதித்து அவ்வழி செய்வதையே பிராணாயாமம், அறம், தவம் என்று கூறியிருப்பதைத் திருமந்திரம் விளக்குகின்றது.

1303

"ஆமே எழுத்தஞ்சுமாம் வழியே ஆக
போமே அது தானும் போம்வழியே போனால்
நாமே நினைத்தன செய்யலுமாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே"

கருவில் மிதித்த கமலப் பாதத்தை ஆண்பாலாகவும் அதிலிருந்து எழுந்த உயிரை சக்தியை பெண்பாலாகவும் திருமந்திரம் விளக்குகிஎறது. இதையே விந்துவிலிருந்து எழுந்த நாதமாகவும் "சத்" இல் இருந்து எழுந்த "சக்தி" என்றும் அகாரத்திலிருந்து எழுந்த உகாராமென்றும் சிவனில் இருந்த எழு-நந்த சக்தி என்றும் கூறப்பட்டுள்ளது. இறைவனின் தாளே, திருவடியே ஒரு தாயின் கருப்பையில் விழுந்து பத்துமாத காலத்துள் விரிந்து உடலைப் படைத்து, உயிராய் நிற்கிறது இந்த உட்பொருள், உறுபொருள் தத்துவத்தை அறியும் அறிவே அறிவாகும். இதையே இந்நூல் விளக்கி நிற்கின்றது.

- எஸ். இராமநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமயத்தை வகுத்த திருமந்திரத்திலிருந்து

## Selected Verses From Thirumanthram

### பாயிரம் Introductory Verses

99. மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடில்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரென்றே

பொருள்:- பேரருளாளனான ராஜரிஷி நந்தி தேவரின் அருளால் அவரது சீடரான திருமூலன் அருளிச் செய்த மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை, அதிகாலையில் எழுந்து, கருத்துணர்ந்து ஓதுபவர்கள் ஞாலத்தலைவனாம் இறைவனை அடைந்து இன்புறுவர்.

The three thousand verses of Thirumantiram, composed by Moolan through the grace of his Guru Nandi, will awaken the spiritual consciousness and enable union with the infinite, if studied in all earnestness with proper under standing, at the break of dawn.

### கடவுள் வாழ்த்து Salutation to Divinity

12. கண்ணுதலான் ஒரு காதலன் நிற்கவும்
எண்ணிலி மாந்தர் இறந்தாரெனப் பலர்
மண்ணுறுவார்களும் ஊனுறுவார்களும்
அண்ணல் இவனென்று அறியகிலார்களே

பொருள்: நெற்றிக்கண்ணில்பூரண அறிவாகத்திழ்பவன் ஆத்மாவைக் காதலித்திருக்கவும் எண்ணிலடங்கா மனிதகுலத்தோர், புலன்சார் புறவாழ்க்கையை நாடி, உலகையும், தமது உடலையும், உடைமைகளையும் மையமாக வைத்து வாழ்ந்து அழிந்து, இறந்தபோதிலும் மனிதர் தம்மோடு இணைந்து நிற்கும் சோதிமயமான ஆத்மாவை அறிகிலர்.

The mankind goes through life without realizing the lover, inspite of the rays of pure cosmic conciousness flowing in their third eye, giving them eternal life. They do suffer owing to their attachment to illusive earthly existence and body conciousness. They do not know that the divine light, that appears in the third eye on the forehead is Atma the allmighty.

20. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அரன் நெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையதுவாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: பிறப்பையும் இறப்பையும் நாம் பிறக்கும் முன்னரே முடிவுசெய்த இறைவனின் அடிகள் இருக்குமிடம் தேரில் அது கருவில் மிதித்த கமலப்பாதத்தில் தோன்றி, விந்து நாதமாக உருவெடுத்து நிற்கின்றது ஆத்மசாதனையில் தீவிரமாக ஈடுபடும் பொழுது சித்தாகாச வெளியில் அடர்த்தியாக மலருள்ள கயிலை மலையாகக் காட்சியளிக்கிறது.

The parameters of this earthly existence (birth & death) have already been set by the source factor in creation; its base is Aharam, it manifests as bindu (,o) and Natham (KH¡f«) the viberatory creative energies. A search for the source will enable the aspirant to enjoy the joy of seeing Kailasamalai thickly studded with flowers in the celestial chithakasa space, knowing this, is to know the home of life.

36. அப்பனை நந்தியை ஆரா அமுதனை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே

பொருள்: என்னைப் படைத்த அப்பனாகிய ஆத்மாவை, உலகில் ஒப்பில்லாத பெருங்கொடை வள்ளலை ஊழ்வினைக்குத் தலைவனை, யோகிகளுக்குத் தெவிட்டாத அமுதம் அளிப்பவனாகிய ஆத்மாவை உங்கள் இஷ்டதெய்வத்தின் பெயரால் வணங்குங்கள், அப்படி வணங்கும் போது அதுவே பரிசாக இறை அருள் அளிக்கும்.

The unstained pure consciousness is Nandi, Athma, the greatest Benefactor, Architect of the cosmos, Father of creation, the bestower of Amirt to the yogies- the source of Bliss; reach out for him giving him the name of your favourite Deity and he will bestow his grace on you

## ஆகமச் சிறப்பு Greatness of the Agamas

36. அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடுமாயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. பொருள்:

ஆத்மாவாக உடம்புள் அண்ணிநிற்கும் இறைவன் அருளால் அருளப் பட்டது இச் சிவாகமம். அதிலிருந்து எண்ணிலடங்காத் தொகுப்புக் கள் வெளியிடப்படினும் "ஓம்" என்று ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா ஓதும் அறிவை அறியாவிடில் தொகுக்கப்பட்ட விரிவுரைகள் யாவும் நீர்மேல் எழுத்துக்குச் சமமாகும்.

A knowledge of Siva agamas pertaining to Saivaism may inspire innumerable literary Creations; but all is of no avail if the source consciousness "Aum", the creative force within all beings remains Unknown.

## குரு பாரம்பரியம் The Guru Tradition

67.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோகமா முனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்று இவர் என்னோடு எண்மருமாமே

பொருள்: பேரருளாளன் நந்திதேவரின் சீடர்கள் எண்மராவர், சனதர் சனாதனர், சனந்தானர் சனக்குமாரர் சிவயோகமா முனி,பதஞ்ஜலி வியாக்கிரமர், திருமூலர் ஆகிய எண்மர்.

67. The great Perceptor satguru (Achcharia) Nandi had eight disciples namely Sanathar, sanathanar, Sananthanar, Sanatkumarar, Sivayogamamuni, Patanjali Viyagramar, and Thirumoolar

## திருமூலர் வரலாறு About Thirumoolar

85.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றிநின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்ற தலைப்படும் தானே

பொருள்: நான் அனுபவித்த பேரின்பத்தை இந்த உலக மக்களும் பெறவேண்டும் அதற்கு வழியாவது இவ்வுடலையும் பிரபஞ்சத்தையும் தாங்கி நிற்கும் மறை பொருளாள "ஓம்" என்னும் உணர்வுறு மந்திரத்தை உணர்வினால் இறுகப் பற்றிக் கொண்டால் அது தானாகத்தலைப்பட்டு நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let the world experience the bliss that I have experienced and enjoyed, the cosmic creative conscious ness Aum( the hidden word) which is behind phenomena. It is the panchchara mantram - motion within the body which when deeply meditated upon knowingly reveals itself the bliss to man.

94 பிதற்றுகின்றேன் என்றும் பேர் நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத்திரவும் பகலும்
உயற்றுவன் ஒங்கொளி வண்ணன் எம்மானை
இயற்றிகழ் சோதி இறைவனுமாமே.

பொருள் : ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை என் உள்ளத்தில் உணர்ந்து ஒதி இரவும், பகலும், அதைப்பற்றி சித்தாகாச வெளிக்கு உயர்த்தி , ஏற்றி பேரொளி வண்ணனான எனது இறைவனை, அப்பனை, சோதிமயமாய் காண்கிறேன்.

Nandi is my life force By meditating deeply on "Aum" day and night and raising the life force to the chitakasa space, I see my God, my Father as the divine light that pervades the entire phenomena.

## அவை அடக்கம் Supplication to the Knowledgeable Assembly

95. ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே

பொருள்: எம்முள் அண்ணிநிற்கும் ஆத்மாவின் பெருமையையோ, அதன் விஸ்தீரணத்தையோ யாரும் அறிய முடியாது பேரற்ற பரஞ்சோதியின் வேராக இருப்பது அவ் ஆத்மசோதி

95. Thy might who could know! Thy might and profoundity who could ever know ; Thou art without beginning or end. Great is thy creative energy ( Param sothy) Light unfathamable; Thy source I know not; The light of my Life.

## திரிமூர்த்திகள் The Trinity

104. ஆதிப்பிரானும் அணிமணிவண்ணனும்
ஆதிக்கமலத்து அலர்மிசை ஆயனும்
சோதிக்கில் மூன்றும் தொடற்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஆதிப்பிரானே விஷ்ணுவாகவும் பிரம்மாவாகவும் நிற்கின்றதை அறியாது உலக மக்கள் வேறாகக் கருதி மயங்குகின்றனர்.

The cosmic source manifests its creative powers through the Trinity of creation, protection, and destruction. The ignorant men are confused by not knowing that it is the one, that's manifesting as Three.

## முதலாம் தந்திரம் First Tantram

2. ஒன்றவன் தானே இரண்டு அவன் இன் அருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான்
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்று அவன்தான் இருந்தனன் உணர்ந்து எட்டே

2. பொருள் : இறைவன் ஒருவனே, இரண்டு சக்தி சிவம் . மூன்று ஓம் என்னும் முப்பதம் நான்கு பிரம்மாவின் நான்கு முகங்கள் ( சப்தப்பிரம்மம், நாதப்பிரம்மம், ஜோதிப்பிரம்மம், அமிர்தப்பிரம்மம்.) ஐந்து ஐம்புலன்கள், ஆறு குண்டலினி சக்தியின் ஆறு ஆதார சக்கரங்கள் (மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி ஆக்ஞா) உம்பர்ச் சென்று சகஸ்ராரம் ஏழாவது நிலை, எட்டாவது சமாதி நிலை எல்லாம் அவனே தான் இருந்தனன் உணர்வீர்.

The cosmic conciousness is one 'Aharam' the base from which arises Sakthy (Uharam) in this state it is two AUM is three ( Aharam Uharam and Maharam) The creative force manifests as the fourth thus the four faces of Atma, ( Viz Sapta, Nada, Jothy and Amirtha) leading to the transcendence of serene perception (Five) resulting in the dynamic flow of Kundalini Sakti along the Six mystic chakaras, reaching the Sahastrara the Seventh point. The Samadhi state in union with the infinite is the eighth. Thou perceiveth that all these one to eight is God alone the Atman.

3. ஒக்க நின்றானை உலப்பிலி தேவர்கள்
நக்கன் என்று ஏத்திடும் நாதனை - நாள்தொறும்
பக்கம் நின்றார் அறியாத பரமனைப்
புக்குநின்று உன்னி யான் போற்றி செய்வேனே.

பொருள் : உடலோடு கூட நிற்கின்றவனை அழிவில்லாத தேவர்கள் நிர்மலன் என்று ஏத்திடும் நாதத் தலைவனை, பக்கத்தில் நின்ற சீவன் அறியாத பரமனை நான் உட்புகுந்து நின்று உணர்ந்து போற்றி செய்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In seperable from my physical self is the atman, which is the cosmic conciousness; Recognised as the quintessence of purity by the celestials; still unknown to the Jeeva though residing within I realise Him in deep meditation and my salutation to the supreme Being.

4. அகலிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத்து எந்தனைப் போத விட்டானைப்
பகலிடத்தும் இரவும் பணிந்து ஏத்தி
இகலிடத்தே இருள் நீங்கி நின்றேனே

பொருள்: உலகில் வாழ்பவர்களின் மெய்ப்பொருளான ஆத்மாவை, பிரபஞ்சத் தோற்றத்தின் வித்தை, நான் போகவேண்டிய இடத்துக்குப் போகும் ஞானத்தைத் தந்தவனை, இரவும் பகலும் பணிந்து, போற்றி இவ்வுலகில் அறியாமை இருள் நீங்கப் பெற்று நின்றேனே.

4. I sought the source of creation, day and night in all humility and earnestness and realised the truth; Hence I stand devoid of ignorance

8. - தீயினும் வெய்யன் புனனிந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவாரில்லை
சேயினும் நல்லன் அணிய நல்அன்பர்க்குத்
தாயினும் நல்லன் நற்தாள் சடையோனே

பொருள்: தீயிலும் பார்க்க வெப்பமானவனும், நீரிலும் பார்க்கக் குளிர்ச்சியானவனு மாய ஈசன், ஒரு குழந்தையிலும் இனியான், ஆத்மாவை அறிந்து உணர்ந்தவர்கட்குத் தாயினும் மேலானவன், எனினும் சடைத்திருக்கும் கருவில் மிதித்த கமலப் பாதத்தை அறியாமல் அருள் பெறுவார் இல்லை.

He being the source of creation, the hotness in Fire, the sapidity in water, more loving than a child and to those who perceive Him, he is more than the loving Mother, yet the people are ignorant of his Grace I salute Him the sustainer of creation .His energy prevades all phenomena.

9. பொன்னாற் புரிந்திட்ட பொற்சடையென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னாற் தொழப்படும் எம் இறை மற்றவன்
தன்னாற் தொழப்படுவார் இல்லை தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: பொன்போல் ஒளிமயமான பிரணவப் பொருளால் சடைத்து நிற்கும் சகல தோற்றங்களுக்கும் காரணகர்த்தாவாய் இருக்கும் ஆத்மா - என் ஆத்மாவால் தொழப்படுவது - இதைவிட்டு வேறு தொழப்படும் பொருள் இல்லை

The golden splendour of the cosmic creative energy is behind all creation and I recognise it through the soul force within me and that being the only manner by which the cosmic splendour of creativity could be known. Not in any other way.

15. ஆதியுமாய் அரனாய் உடலுள் நின்ற
வேதியுமாய் விரிந்து ஆர்ந்து இருந்தான் – அருட்
சோதியுமாய் சுருங்காத ஓர் தன்மையும்
நீதியுமாய் நித்தமாகி நின்றானே

பொருள்: ஆதிப்பொருளாய், இறைவனாய், விந்துநாதச் சக்கரத்தில் எழுந்த வேதப் பொருளாய், எங்கும் விரிந்தும் பரந்தும் இருந்து, அருட்சோதியுமாய் என்றும் குறைவுபடாத நிறைவாய், அகார உகாரத்தில் ஓ மென்னும் பொருளாய் நித்தலும் நிலைத்து நின்றானே.

15. He is the causal Factor. He is the creator He is the Soul Force in all beings and he is the sustaining divine energy of phenomena. He is the Infinite, Eternal, Unerring substance of creation.

26. தொடர்ந்து நின்றானைத் தொழுமின் தொழுதாற்
படர்ந்து நின்றான் பரிபாரகம் முற்றும்
கடந்து நின்றான் கமலம் மலர் மேலே
உடந்திருந்தான் அடி புண்ணியமாமே

பொருள்: பிறப்புக்குப்பின் பிறப்பெடுத்து நிற்கும் ஆத்மாவைத் தொழுமின்கள். இப்பாரெங்கும் வியாபித்து, மண்ணுலகத்தைக் கடந்து கருவில் மிதித்த கமலப் பாதத்திற் கலந்திருக்கும் ஆத்மாவைத் தொழுவதே புண்ணியமாகும்.

Do worship by recognising the causal factor of creation within you. Such worship results in perceiving his cosmic nature as the Lord of the galaxies and as springing from your very being to which he is the cause.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. மண்ணகத்தான் ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத்தான் ஒக்கும் வேதகத்தான் ஒக்கும்
பண்ணகத்து இன்இசை பாடலுற்றானுக்கே
கண்ணகத்தே நின்று காதலித்தேனே.

பொருள்: மண்ணுலகத்தைச் சேர்ந்தவன் போல கூட நிற்கும் வானுலகத்தைச் சேர்ந்தவன் போலவும் கூடநிற்கும், விண்ணுலகத்தைச் சேர்ந்தவன் போலவும் நிற்கும் விந்து நாதச் சக்கரத்தில் நிற்கும் நாதலோகத்து இன் இசைப் பாடலுற்றானை நெற்றிக் கண்ணில் வைத்து அன்பு செய்தேனே

He being the earth, being the heavens, being the wisdom of the seers, being the creative Energy operating in the "Bindu- Natha" Chakara . He is the Lord of the "Nada Loka" ( the world of Sound) I perceive him through the deeper perception of my third eye, in eternal love.

43. அரன் அடி சொல்லி அரற்றி அழுது
பரன் அடி நாடியே பாவிப்ப நாளும்
உரன் அடி செய்து அங்கு ஒதுங்க வல்லார்க்கு
நிரன் அடி செய்து நிறைந்து நின்றானே

பொருள்: எந்த நாளும் அகார எழுத்தான கருவில் மிதித்த கமலப் பாதத்தின் கண்ணே மனத்தைப் பதித்து ஐந்தெழுத்தை ஓதி, அடங்க இறையருள் பெய்து நிறைந்து நிற்பான்.

Meditate on Aharam the base of his cosmic creative consiousness, daily , diligently and in all eamestness to realise the source of your being .To those who are rooted in meditation on Aharam, He will shed His Total Grace to them.

79. சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனை
சேர்ந்திருந்தேன் சிவனாவடு தண்டுறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நிழலிற்
சேர்ந்திருந்தேன் சிவநாமங்கள் ஓதியே

பொருள்: ஐந்தெழுத்தை ஓதி, சக்தியின் பாகனான சிவனை, அவனின் திருவடியான அகார எழுத்தைச் சேர்ந்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I have experienced the union of Siva- the Lord of Sakthy by Meditating on Aharam- the root of the cosmic creative Energy.

114. களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருட்கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே

பொருள்: எமது நெற்றிக்கண்ணைத் திறப்பித்து , எமது மும்மலத்தை அறுத்துச், சித்தாகாச வெளிதனில் ஆத்மசோதியைக் காணவைத்தான் எமது கண்ணுதல் நந்தியாம் ஆத்மகுரு.

Atmaguru Nandi has deepened our perception, opening the third eye, thus the light of knowledge is revealed; shining red gem studded on translucent marble.

132. பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும் பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமை

பொருள்: இறைவனை உணரும் மார்க்கத்தை உணர்ந்தவர்கள், மீண்டும் உலகிற் பிறவாப் பெரும் பயனையும் சித்தாகாச வெளியினின்றும் பிரியாப் பெரும் பேற்றையும், மாயையுடன் தொடர்பு அற்ற நிலையினையும் பெற்றவராவர்.

The realised Souls transend the cycle of Samsara (birth & death) by shedding bondage and attain the state of Immortality,union with the infinite.

135. சத்தம்முதல் ஐந்தும் தன் வழித்தான் சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர் இடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர் சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டு கொள்ளப்பிலே

பொருள்: ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தின் ஓம் என்னும் முதற் சத்தம் தன் வழியே சார்ந்திருக்கில், அறிவுப் பொருள் அறிவுடன் சேரும். சித்தாகாசப் பரவெளியில் பரஞ்சோதியுடன் ஆத்மசோதி சேரும். இந்த உண்மையை ( சத்தியத்தை) அறிந்து கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The viberatory cosmic creative Energy, if contacted, will lead you on its own path. Knowledge seeks Knowledge like light merges in light . The pure conciousness ( the soul force) mingles with pure cosmic conciousness. Know this , being the Truth.

138. திருவடியே சிவமாவது தேரிற்
திருவடியே சிவலோகம் சித்திக்கிற்
திருவடியே செல்கதியது செப்பிற்
திருவடியே தஞ்சம் உட்தெளிவார்க்கே

பொருள்: கருவில் மித்த கமலப் பாதமே இறைவனின் திருத்தாள் ( அகாரம்) தன் ஆத்மாவைத் தனக்குள் ஓதி உணர்ந்தவர்கள், உயிராகிய ( உகாரம்) சிவனாகிய அகாரத்தில் அடங்கித் தஞ்சமடைவதை நன்கு உணர்வர்-உள்ளே

Aharam is the base or hub of cosmos. The realised souls realised by meditating on Athma, that the ultimate goal of Life Force is to reach the Source and that is its refuge .This is the Truth.

174. வாழ்வும் மனைவியும் மக்கள் உடன் பிறந்தாரும்
அளவே தமக்கென்பர். ஒண்பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார்கட்குக்
கூவும் துணையொன்று கூறலுமாமே

பொருள்: உலக மக்கள் தமது வாழ்வு, தமது மனைவி, மக்கள், சகோதரர் என்ற வட்டத்துடன் நின்றால் தமக்குப் போதுமானது, வேறொன்றுக்கும் அவர்களுக்கு நேரமில்லை என்று சொல்வர் தம் உடம்புள்ளேயே இயங்கும் ஆத்மாவை உணர்ந்து அதனுடைய ஈடுபாட்டை விரிவு செய்ய எண்ணுபவர்கட்கு "X«" என்று கூறும் மெய்ப்பொருள் துணை புரியும்.

A mundane existance involving family, profession and related activity fills up human life and they do not want to see anything beyond it. But to those who link their energies with Truth and understanding the cosmic conciousness; Aum flowing into them will reveal every thing. Eternal help. surround them all.

162. கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலயமும் அற்றது அறுதலும்
பாடுகின்றார் சிலர் பண்ணில் அழுத்திட்டுத்
தேடிய தீயினில் தீய வைத்தார்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உயிர் நடம் செய்த உடம்பு, உயிர்பிரிந்தும் அசைவின்றி, உயிரின் ஓட்டம் இன்றிக் கிடக்க, சிலர் பாடுவார், சிலர் ஒப்பாரி வைத்து அழுவார் அதன் பின் நெருப்பை மூட்டி எரித்து விடுவார்.

The body without life lies motionless, unaware of the activities around it Some are lamenting some are singing devotional songs Finally the mortal coil is consigned to the fire.

164. இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருளாவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

பொருள்: நிலையற்ற அழியும் உடம்பினை நிலையானதென்று நம்பி மனிதர் துன்பத்தில் அழுந்துகின்றனர். உயிர் பிரிந்ததும் உடம்பு அழிந்துபோகும். பகலுக்குப் பின் இரவு வருவது போல், பிறப்புக்குப் பின் இறப்பு வரும் என்பதனை அறியாத மூடர்

When the life force leaves the body, the body remains like a lamp without the flame. The earthly living provides an illusion of the reality to the unenlightened. As every night is followed by the day, death follows birth (life) but the ignorant suffer in illusion

## 271. அன்புடைமை - Love of God

பொன்னைக் கடந்து இலங்கும் புலித்தோலினன்
மின்னிக்கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக்கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என்பேரன்புதானே

பொருள்: பொன்னிலும் பார்க்க ஒளிமயமாகப் புலித்தோலில் மஞ்சள் நிறப்பொட்டுக்கள் இருக்குமாப் போலுள்ள ஒளிமயமான இறைவனடியில் என்னுடைய பேரன்பு பின்னிக்கிடந்தது என்னே

My love lies eternal at the feet of the one whose form is pure light which shiness as the dotted golden light in the space of Chithakasa.

273. ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவந்தன்னை
கோர நெருக்கொடு கோங்கு புக்காரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: அரனைக்காணும் ஆர்வம் உடையவர்கள் அரனைக் காண்பர் அன்பினால் மனக்கசிவுடையவர்கள் ஆத்ம சக்கரத்தோடு இணைந்து நிற்கும் கருவில் மிதித்த கமலப் பாதத்தைக் காண்பர். உலகப் பார முடையவர்கள் பாவத்தையே கண்டு தாங்கொணாத் தொல்லைகளுடன் இறந்து பட்டுச் சுடுகாட்டினை அடைவர்.

Those who are keen on realising the truth and work tirelessly towards that goal will certainly reach the same goal.Those who love the Lord will reach Him, But those who dabble in the affairs of the world will see sin and suffer it unto the grave.

274. என் அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்
முன் அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்
பின் அன்பு உருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன் அன்பு தனக்கே தலைநின்றவாறே

பொருள்: அன்பு கனியும் ஆத்மாவைத் தேடித்தேடி உள்ளம் (இதயம்) உருகித் தேடி வழிபடுமின். ஆத்ம அன்பினால் வழிபட்டபின்பே பெருந்தகையாம் நந்தியும் அன்புவழித் தலைவனானார்.

Worship the Lord, with your heart Melting. Seek the Atma with deep love, Then Only the atmam is realised by the atmam in ATMIC Love (Bliss)

278. நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசு அறிந்தேயு மனிதர்கள்
இச்சையுள்ளே வைப்பர் எந்தை பிரானென்று
நச்சியே அண்ணலை நாடுகிலாரே

பொருள்: இன்பமாயிருக்கும் (முத்தியளிக்கும்) ஐந்தெழுத்துச் சக்கரத்தை இறைவன் உள்ளே வைத்திருக்கும் பரிசையும், துன்பமாய இறப்பையும் அறிந்த மாந்தர் எமக்குள் அண்ணிநிற்கும் எமது அப்பனை விரும்பி அணுகாது ஐம்புலன் வழியிலேயே செல்ல முற்படுவார்.

The Lord lives in the five lettered chakara which is his gift to humanify. He also has decreed the sorrowful death to Human beings But Humans prefer to lead the life of the five senses instead of seeking their refuge in the Lotus feet of the Lord.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279. அன்பிலுள்ளான் புறத்தான் உடலாயுள்ளான்
முன்பிலுள்ளான் முனிவர்க்கும் பிரான் அவன்
அன்பினுள்ளாகி அமரும் அரும் பொருள்
அன்பினுள்ளார்க்கே அணைதுணையாமே

பொருள்: அன்பே உருவாய் உள்ளும் புறமும் இருப்பவன் உடலைப் படைத்து நிற்பவன் முன் பிறப்புக்களிலும் இனிவரும் பிறப்புக்களிலும் உள்ளே இருப்பவன். அன்பினுக்கு அடிமையாய் அன்பிலே அமரும் அரும் பொருளாய் இருப்பவன், அன்புடையாரை அணைந்து நிற்கும் துணை யாவான்

Love is his form within and without. He is the creator of this body .He is the Lord of the Yogies. He is bound in Love and abides in it; and he is the Eternal Help of the loving Souls.

280. அன்பு செய்வாரை ஈசன் அறிவன்

**God knows those who love him**

இகழ்ந்தும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்து அருள் செய்திடும் உந்தம் நாதன்
கொளுந்தன்பு செய்தருள் கூரவல்லார்க்கு
மகிழ்ந்து அன்பு செய்யும் அருளது வாமே

பொருள்: அன்பு செலுத்தாமல் தூற்றுவதும், அன்பு செலுத்துவதும் ஆத்மாவிற்குத் தெரியும். செழுமையாகத் தளிர்க்கும் அன்பு கூரவல் லார்க்கு, விரும்பி அருள் செய்யும் இறைவன் மகிழ்ந்து செய்யும் அன்பு அவனது அருளாகும்.

The Atma Knows the one who loves and the one who loves not Those who develop tender love for him,will be blessed with His Loving Grace.

282. அன்புறு சிந்தையின் மேலெழும் அவ் ஒளி
இன்புறு கண்ணியொடு ஏற இசைந்தன
துன்புறு கண்ணி ஐந்தாடுந்துண்டறக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே.

பொருள்: அன்புறு சிந்தையில் ஆத்மசோதி சக்தியுடன் விண்ணுலகம் ஏற இசைந்து ஐந்தெழுத்தில் இயங்கும் கட்டுப்பாடு அற்று அகார எழுத்தில் (திருவடியில்) அடங்கி இருக்கும் நிலையை அடைய நீங்கள் முற்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Seek the state when the Atma (Atma Jothy) after crossing the celestial abode, disconnects its usual path and lies in union with Aharam - the base.

285.
கண்டேன் கமழ்தரு கொன்றையினான் அடி
கண்டேன் கரியுரியான்தன் கழல் இணை
கண்டேன் கமலமலருறைவான் அடி
கண்டேன் கழலது என் அன்பினுள் யானே.

பொருள்: இறைவனின் தாழ்மா நறுமணம் நிறைந்த கொன்றையை யொத்தது. ஈசனின் கமலப் பாதத்தை எனது நிறை அன்பால் கண்டு கொண்டேன்

I have seen the Lotus feet of the Lord which shines like the "Konrai" flower within my heart through my love.

286.
நம்பனை நானாவிதம் பொருளாகும் என்று
உம்பரில் வானவர் ஓதுந்தலைவனை
இன்பனை இன்பத்திடை நின்று இரதிக்கும்
அன்பனை யாரும் அறியாகிலாரே

பொருள்: எண்பத்தி நாலாயிரம் கோடி யோனி பேதப் பிறப்புக்கள் எடுத்து நிற்கும் இன்புருவான மெய்ப்பொருளை சித்தாகாசப் பெருவெளியில் யோகிகள் மகிழ்ந்து ஓதும் தலைவனை, அன்பானவனை, மக்கள் அறிவதில்லை.

People do not realise the Atma that manifests in the birth of 84,000 billion different species, the eternal Bliss, loved and praised by the Yogies of the celestial abode

287.
முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம் அறியோம் என்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலா நந்தி
அன்பில் அவனை அறியகிலாரே

பொருள்: தமது முற்காலத்துப் பிறப்பும் இறப்பும் அறியாதவர்கள் அன்புருவாகிய இறைவனைத் தாம் அறியவில்லை என்பர் ஆத்மா (நந்தி) பிறப்பும் இறப்பும் அற்றது அன் பில்லாதவர்கள் அவனை அறிய மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Those who are ignorant of their previos births and deaths say that they do not know the Loving Lord. The Atma ( Thirumoolar gave the name of his Guru Nandi to Atma) has no births and deaths Those Loveless beings will not be able to realise this Atma.

## கல்வி - Knowledge

குறிப்பறிந்தேன் உடல் உயிரது கூடிச்
செறிப்பறிந்தேன் மிகுதேவர் பிரானை
மறிப்பறியாது வந்து உள்ளம் புகுந்தான்
கறிப்பறியா மிகுங்கல்வி கற்றேனே

பொருள்: ஐந்தெழுத்தில் இயங்கும் இறைசக்தி. பிரபஞ்சத்தைத் தாங்கும் மூலசக்தி , பிராணவாயுவில் இயங்கி எனது உடலுக்கு உணர்வூட்டு வதையும் அது தூலப்பொருட்களோடு கலவாத தூய துல்லிய பேரின்ப உணர்வாய் இருக்கும் அறிவை அறிந்தேன்

290. The source consciousness issuing from God born on the five lettered viberatory energy wheel ( Chakara) enters me to activate my consciousness.This pure consciousness ignites the whole phenomena with life awareness. Perceiving this , I am aware of the source consciousness in its untained state. I experience bliss.

291. கற்றறிவாளர் கருதிய காலத்து
கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறிவாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறிகாட்டக் கயலுளவாக்குமே

பொருள்: மெய்ப் பொருளைப்பற்றிக் கற்று அறிந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கும் காலத்தில் நெற்றிக் கண்ணில் கவனம் செலுத்துவர் ஐந்தெழுத்துச் சக்கரத்தில் எழும் "X«" என்னும் உரையை உன்னிக் கேட்கும் போது அவர்களுக்கு நெற்றிக்கண் புலப்படும்

The realised souls who perceive the source consciousness as proceeding from God, experience a deepening of their perceptions. Their Knowledge is not circumscribed by the five senses They whilst becoming aware of the cosmic viberatory force AUM, do (they) experience cosmic consciousness revealed in the Third Eye.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

292. நிற்கின்றபோதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றலின்றித் தொழுமின் தொழுதால்
மற்றொன்றிலாத மணி விளக்காமே

பொருள்: ஆத்மா உடம்புள் நிற்கும் பொழுதே அழியாத மெய்ப் பொருளான ஆத்மாவின் இணையடியான கருவில் மிதித்த கமலப் பாதத்தை அறிந்து உணர்ந்து கொண்டால் பாவங்கள் அழிந் தொழிந்து விடும். ஐந்தெழுத்தை ஓதுங்கள். ஓதி உணர்ந்தபின் பரஞ்சோதியின் ஒரு துளியான ஆத்ம சோதி துலங்கும்

Realise the Cosmic consciousness while you are alive by meditating on AUM. Meditation on Aum will cleanse you of all your past sins and will deepen your perceptions to realise the Truth that the Atma ( Life Force) is a spark of the Paramjothy ( the all prevading light)

294. துணையதுவாய் வருந் தூயநற் சோதி
துணையதுவாய் வருந்தூயநற் சொல்லாம்
துணையதுவாய் வரும் தூயநற் கந்தம்
துணைய துவாய் வரும் தூயகற்கல்வியே

பொருள்: பரஞ்சோதி எப்பொழுதும் எமக்குத் துணையாய் வரும். ஓம் என்னும் ஐந்தெழுத்துச் சொல் எப்பொழுதும் எமக்குத் துணை, இறை உணர்வினால் உண்டாகும் சந்தன வாசனையும் எமக்கு எப்போதும் துணை, இறைவனை உணரும் ஞானம் எப்போதும் எமக்குத் துணை

294. The all prevading Supreme Flame called Paramjothy remains our help at all times. The five lettered viberatory cosmic force of creation is our Mainstay always: The fragrance of self Realisation is our Permanent Armour. Self Realisation is always our support. Cosmic Knowledge is the greatest boon in Human Life.

296. ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய் மணிசிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்ட வல்லார்கட்கு
வாய்ந்த மனமல்கும் நூலேணியாமே

பொருள்: சுழுமுனை நாடியில் ஓம் என்னும் இறை நாமத்தை ஓதி உணர்ந்து கொள்பவர்களுக்கு இறைவன் அங்கே வெளிப்படுவான். அது தோய்ந்த நெருப்பை ஒத்த பெருஞ்சோதி யாம் பரஞ்சோதி அதன் ஒளித்துகள்களே ஆத்மசோதி ஐந்தெழுத்தைத் தியானத்தில் இளமதிபோன்ற ஒளியைக் காணும் வல்லமை உடையவர்கள் சுழுமுனை நாடியில் நூல் ஏணிபோல் ஏறும் பிராண வாயுவை உணர்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Those who seek the Truth will find the Light of Truth dawring upon them. The meditative path expounded in Thirumanthiram by sage Thirumooler furnishes the seeker with an infallible method for a the attainment of cosmic consaiousness which the seeker comes to understand as flowing along the Susumna Nadi ( Sookshuma Nadi-central Nadi)

297. வழித்துணையாய் மருந்தாய் இருந்தார் முன்
கழித்துணையாம் கற்றிலாதவர் சிந்தை
ஒழித்துணையாம் உம்பராய் உலகேழும்
வழித்துணையாம் பெருந்தன்மை வல்லானே

பொருள்: ஆத்மா உய்யும் வழிக்குத் துணையாய், மருந்தாய் இருப்பவர் (குரு) அவரே. இறையுணர்வு அற்றவர்களின் குழப்ப மனத்தை ஒழித்து ஏழு சக்கரங்களின் ஊடாக இறை உணர்வை ஏற்றி அவர்களின் ஆத்மாவை ஈடேற்ற வல்லவராவர்.

The Great one, Guru helps the jeevas to attain higher state of evolution by enabling them to realise the Atma . Self Realisation brings an end to the Karmic effects of all earlier births .This state is the state of dynamic expansion of the consciousness, through the ascension of the Seven Mystic Chakaras.

298. பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லாம் முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே

பொருள்: ஏதாயினும் ஒரு பொருளில் பத்திசெய்ய வேண்டுமென்றால், அப்பக்தியை இறைவன் பாற் செலுத்துங்கள். முதல்வனாகிய இறையருள் பெற்றால், எல்லாம் சித்திக்கும். இறையருளைக் கண்ட யோகிகளும் ஞானிகளும் பேரின்பம் அனுபவிப்பர்.

Be attached only to the Lotus feet of the Lord and abandon all other attachments. The Grace of the Lord will confer every - thing on you. The Yogis and Gnanis ( the realised Souls ) who see the Divine light enjoy Bliss.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

299. கடலுடையான் மலையான் ஐந்து பூதத்து
உடலுடையான் பல ஊழிதொறூழி
அடல் விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடமுடையார் நெஞ்சத்தில் இருந்தானே

பொருள்: தானே கடலுமாய் மலையுமாகி, நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாசமான அடக்க முடியாத ஐம்பெரும் பூதங்களாய் பல பிறப்புகளாய், ஒளிமயமான கடாப்போல் ஏறும் ஆத்மாவாய் இயங்கும் இறைவன் உள்ளத்தில் இடம் கொடுத்தவர்கள் நெஞ்சத்தில் அமர்ந்து இருந்தானே

The One who manifests himself as the Sea, the Mountain, the Pancha Bhutas the five greatel ements, such as earth, water, fire, ether and space, and the numerous forms of Life of the phenomena is ever present in the hearts of those who give Him their Hearts.

301. தேவர் பிரானைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே

பொருள்: திவ்விய மூர்த்தியாகிய தேவர்களுக்குத் தலைவனாகிய ஆத்மாவை அறியுங்கள். அறிந்த பின் ஐந்தெழுத்தில் இயங்கும் "X«" என்னும் இறை நாமத்தை ஓதுங்கள், அதனில் எழும் நாதத்தைக் கேளுங்கள், இறை உணர்வை உணர்மின்கள். அப்படி ஓதி உணர்ந்தவர்கள் சிவத்தோடு ஒன்றி உயர்ந்து நின்றார்கள்.

The Lord of the Devas is the Atma . know this. After knowing this, recite the five lettered Mantra that operates as AUM. Listen to its Nada- the resonance. Realise the self .Those realised souls do rise to the hoary heights of becoming one with Sivam

307. உறுதுணையாவது உயிரும் உடம்பும்
உறுதுணையாவது உலகுறு கேள்வி
செறிதுணையாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லைத்தானே

பொருள்: உற்ற துணையாயிருப்பது உயிரும் உடம்பும் உலகத்தைப் பற்றிநிற்கும் நாதமும் ஆகும் கருவில் மிதித்த கமலப்பாதத்தில் பதிந்திருக்கும் மனமே பரந்து நிற்கும் துணை இப்பேற்றை அடைந்தவர் பெறும் பெருந்துணை பிறப்பில்லாமையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

307. The vital power activates the body and the Life Force in beings. Those whose mind is fixed on to the Lotus feet of the Lord, who could hear the Nada that prevades the universe, are released ( liberated) from future births.

## " கல்லாமை - Ignorance"

310. கல்லாதவரும் கருத்தறி காட்சியை
வல்லாரெனில் அருட்கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மை பற்றா நிற்பர் கற்றோரும்
கல்லாதார் இன்பம் காணுகிலாரே

பொருள்: ஆத்மஞானம் இல்லாதவர்கள் இன்பத்தை அனுபவிக்க முடியாது. அவர்கள் உண்மைப் பொருளான ஆத்மாவைப் பற்றி நிற்க மாட்டார்கள். எழுத்தறிவில்லாதவர்களும் மெய்ப்பொருளின் கருத்தை அறிய வல்லார்கள் எனில் அவர்கள் நெற்றிக்கண்ணில் ஆத்மாவை கண்டு இன்புற்றிருப்பர்.

Those who are ignorant of the Self cannot enjoy Bliss. Even those without the knowledge of the alphabets ( Unlettered) do have the capacity to realise the Atma, will see it through the Third Eye and enjoy Bliss.

311. வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்
அல்லாதவர்கள் அறிவுபல என்பார்
எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை
கல்லாதவர்கள் கலப்பறியாரே

பொருள்; வல்லமை உள்ளவர்கள் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தின் வழிச்சேர்ந்து வாழ்கின்றார்கள். வல்லமை இல்லாதவர்கள், அறிவு பல என்று சொல்லிப் பிதற்றுவர். இறைவன் எங்கும் வியாபகமாக உள்ளான் அஞ்ஞானிகள் உடம்பிலேயே உயிர்கலந்து நிற்பதை அறிய மாட்டார்கள்.

The real earnest seekers meditate on the movement of the five lettered Mantra AUM .The nonseekers are involved with the exteral knowledge of the physical universe thereby missing the real knowledge .
The Lord Pervades the Universe. Yet the non- seeker is ignorant of the fact that it is the Life Force that activates the body.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

312. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென்று உணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதே

பொருள்; நிலையற்ற உடம்பை நிலையென்று நினைக்கும் நிலையற்ற நெஞ்சத்து உணர்வினை உடையவர்களே! எல்லா உயிர்களையும் இயக்குவிக்கும் இறைவன் ஒருவனே என்றாலும், அஞ்ஞானிகள் உள்ளத்துள் இயங்கும் மெய்ப்பொருளாய ஆத்மாவைக் காண மாட்டார்கள்.

So long as you feel the impermanent physical body as permanent and real, though the cosmic consciousness pervades and activates all beings, the ignorant cannot perceive the all Pervading Self in their hearts ( the Atman within the hearls).

313. கில்லேன் வினைத்துயராக்கும் மயலானேன்
கல்லேன் அரன்நெறி அறியாத் தகைமையில்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழிய நின்று ஆடவல்லேனே

பொருள்: மெய்ப்பொருளை உணரமாட்டேன். துயரத்தைக் கொடுக்கும் மாய உலக வினைகள் செய்யும் வழி நின்றேன். அஞ்ஞானத்தில் வல்லவனானேன். உள்ளத்தினுள்ளே வழங்கும் பிராணனைக் கற்கமாட்டேன். பிராணன் விரையமாகும் வழியே நின்று ஆடமட்டும் வல்னேனாயினேனே.

Not perceiving the truth, I am involved in works that propogate ignorance and sufferring .I am proficient only in ignorance. I will not learn the gift of knowing the Prana within me. In vain I am only qualified in ways of wasting the Life Force within me.

314. நில்லாது சிவன் நிலையன்று என எண்ணி
வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினார்
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம் செய்வாரே

பொருள்: புத்தி உள்ளவர்கள் சிவன் உடம்பினுள் நிலைத்து நிற்கமாட்டாது என்பதனை நன்கு உணர்ந்து, தியானத்திலும் தவத்திலும் ஈடுபடுவர். அஞ்ஞானிகள் உலகில் பொல்லாத வினைகள் செய்து துயரத்தையே தாம் அறுவடை செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Knowing the impermanent nature of the physical body frame, the seekers of Truth, embark on a voyage of discovery of the Truth through Meditation and concentration on the Self .The nonseekers, spurning the Truth harvest pain and sorrow caused by ignorance.

315. விண்ணினுள்ளே விளைந்த இளங்கனி
கண்ணினுள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினுள்ளே மிதித்து மிதித்து நின்று
எண்ணி எழுதி இளைத்து,விட்டாரே

பொருள்: விண்ணுலகத்தில் கனிந்த பொருளான ஆத்மா நெற்றிக்கண்ணினில் ( இன்புறக்) கலந்து இருந்தது. இதை அறியாது உலகமாந்தர் எத்தனையோ விதத்தில் எண்ணியும் எழுதியும் களைத்து விட்டனர்.

The cosmic creative energy ( Atma) decended from vinloka ( Heaven) and took residense in the third eye of the Human Beings,deepening perception, distinct from the sense perceptions Being unaware of this the ignorant People tried to express this in terms of the physical self that brings about defeat, exhaustion and futility.

317. கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக்கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே

பொருள்: அஞ்ஞானிகளைப் பார்க்கவும் கூடாது, அஞ்ஞானிகள் சொற்கேட்கவும் கூடாது. அஞ்ஞானிகட்கு அஞ்ஞானிகளே நல்லவர் ஆவார். அஞ்ஞானிகள் பிறப்பின் நோக்கத்தையும் அறியமாட்டார்கள்.

The company of the non seeker of Truth should be spurned. Their words too should be spurned. The ignorant people enjoy the company of the ignorant. Ignorant people fail to under- stand the purpose of birth.

318. கற்றுஞ் சிவஞானமில்லாக் கலதிகள்
சுற்றமும் விடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்று அன்பில் நிற்போர் கணக்கறிந்தார்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: சாதாரண மக்கள் எழுத்தறிவிருந்தாலும் சிவஞானம் கைவரப்பெறாத அஞ்ஞானிகளாகவே இருக்கின்றனர். அவர் தங்கள் சுற்றத்தார் பநித்தங்களை கைவிடமாட்டார்கள். மாயையிலழுந்தும் மதிகெட்ட மூடர்கள் தமது குற்றங்களைக் களைய மாட்டார்கள். வானுலகம் விண்ணுலகத்தைப் பற்றிய அறிவு அவர்களுக்கில்லை ஆத்மஞானம் கைவரப்பெற்று அன்பில் இருப்போர் விடுதலை பெறும் மார்க்கம் அறிந்தவராவர்.

Those whose knowledge is exclusively worldly and gained from books, though educated are still ignorant beings completely immersed in worldly living as relations, family friends, and other connected ties. They are hosts to many failings and ignorant about the other planes of existence. The spiritually knowledgeable people who live in perpetual spiritual love hold the key to the infinite.

319.

ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல்லோம் என்பர் உன்நின்ற
சோதி நடத்தும் தொடர்வு அறியாரே.

பொருள்: விந்து நாதச் சக்கரத்தில் இயங்கும் ஆத்மாவே தேவர்களுக்கும் பரஞ்சுடராக. நிற்கின்றது. அதுவே ஒளிமயமான கருவில் மிதித்த கமலப்பாதத்தை அண்டி நிற்கும் அடியவர்கள் தேடும் பெரும் தெய்வம். ஐந்தெழுத்தை ஓதி உணரவல்லோம் என்று சொல்பவர்கள் ஒளிமயமான இறைவனின் திருவடி சித்தாகாசத்தில் நடமாடுவதை அறிய மாட்டார்கள்.

The Divine Cosmic creative energy Moving in the Bindu Nada Chakaras is Atman .The knowledgeable seek this and establish links with the Source. The boastful who are ignorant of this golden link between the Jeevatma "being" and Paramatma (the source) prate that they know everything.

## 320. நடுவுநிலைமை **Awareness**

நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவருமாவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: இடகலை பிங்கலை நடுவாக நிற்கும் சுழுமுனை நாடியில் நிற்பவர்க்கன்றி ஞானமும் இல்லை. ஆத்ம சக்கரத்துக்கு நடுநாடியாய் இயங்கும் அகார உகார எழுத்துக்கள் ஓம் என்னும் இறை நாமத்தை மகாரம் இறுதியாக உரைக்கின்றது. இந்த நடுநாடியில் இருப்பவர்க்கு நரகமும் இல்லை. அவர்கள் நல்ல தேவரும் ஆவர். அந்த வழியிலே நானும் ( திருமூலர்) நின்றேனே.

Only those who are aware of the creative viberatory force, flowing in the Sukshuma Nadi ( Sulumunai) will realise the self. Meditation on this cosmic flow leads to Complete knowledge of the self . This awareness ends all anxieties and Miseries and confers bliss. Thirumoolar says that he has been on this path.

322. நடுவுநின்றார் சிலர் ஞானிகளாவர்
நடுவு நின்றார் சிலர் தேவருமாவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனுமாவர்
நடுவு நின்றாரொடு நானும் நின்றேனே

பொருள்: சுழுமுனை நாடியில் நின்றசிலர் ஞானிகளாகவும் சிலர் தேவராகவும் சிலர் இறைவனுமாவர். ஞானிகள் யாரெனில் மெய்ப்பொருளான ஆத்மாவை உணர்ந்தவர்கள். அவர்களோடு தானும் நின்றாகத் திருமூலர் கூறுகின்றார்.

322. Of those who stands steadfast on the Susumna Nadi, some become sages, some saints and some become Devas and some achieve God hood " I also stand with them, "so declares Thirumoolar.

326. கள்ளுண்ணாமை Abstinence

ாமமும் கள்ளுங் கலதிகட்கே யாகும்
மாமலமும் சமயத்துள் மயலுறும்
போமதியாகும் புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே

பொருள்: கள்ளும் காமமும் கீழ்மக்களின் குணமாகும். மும்மலமும் மயக்கமடையும். ஆத்மசக்கரத்தோடு இணைந்து நிற்கும். கருவில் மிதித்த கமலப் பாதத்தில் தியான முண்டாகில். அவ்வடியில் இருந்து எழும் "ஓம்" என்னும் நாம உணர்வு ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Limitations to achieving cosmic awareness are Lust and inftoxication,leading to self delusion, detracting, evolution on the appointed path. The less evolved are caught up in this mess. Those who meditate on the Lotus feet of the Lord ( Aharam) enjoy bliss.

328 உள் உண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே

பொருள்: உடம்புள் இயங்கும் மெய்ப்பொருளாய ஆத்மாவை அறியமாட்டார், பசுபாசம் இவற்றின் தன்மையையும் உணரமாட்டார். தெளிவான உண்மையாம் ஞானச்சிவயோகமும் சேர மாட்டார்கள், பிறப்பின் நோக்கத்தையும் அறிய மாட்டார்கள் கள்ளுண்ணும் மாந்தர்.

Those who are addicted to intoxication would not know the Indweller of the body the Atma. They would not know anything about life or illusion .The True knowledge of the self is denied to them and they cannot be aware of the purpose of human birth.

முதலாம் தந்திரம் முற்றிற்று

**THE FIRST TANTRA OF THIRUMANTHRAM IS CONCLUDED.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தந்திரம் The Second Tantra
## சர்வசிருஷ்டி Creation of the Cosmos

384. புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசையானாய்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே

பொருள்: அகார உகாரமான சிவன் சக்தியால் தான் பிரபஞ்சம் படைக்கப்பட்டது. அவர்களுக்குப் புத்திரர் ஐவர். ஓம்காரி ஈன்ற அகார இகார, உகார, ஒங்கார, மகார என்ற ஐந்தெழுத்துக்களும் ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் புண்ணியனே இப்புவனத்தைப் படைத்தான்.

The cosmic creative energy is Siva and Sakti that created the phenomena.Their creative force is Aum. The sustaining power behind phenomena is the five lettered viberatory force Aum.

391. காரணன் அன்பிற்கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடு உடலாய் நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரணமாய் உலகாய் அமர்ந்தானே

பொருள்: தோற்றங்கள் படைப்புக்களுக்கு காரணகர்த்தாவாய் நிற்கும் இறைவன் அன்பிற் கலந்து எங்கும் நின்றான். நாரணன் ( விஷ்ணு) சுழுமுனை நாடியில் நின்றான். உலகத்தைப் படைத்தவன் பிரம்மா ஓம் என்னும் பதத்தை ஓதும் ஆத்மாவாய் ஐந்தெழுத்துச் சொற் தோற்றங் களாய், உலகாய் அமர்ந்தான்.

391 The creative grace of the causal factor behind phenomena sustains every- thing as Brahna,Vishnu and Siva. The causal factor pervades the universe in love.The protective energy Vishnu flows in the Sasumna Nadi and the four faced Brahma (fourfaces - sapta Natha , Jothy & Amirtha) is the atma manifesting the phenomena in Aum.

394. நின்று உயிராக்கும் நிமலன் என் ஆருயிர்
ஒன்று உயிராக்கும் அளவை உடலுற
முன் துயராக்கும் உடற்குத் துணையதா
நன்று உயிர்ப்பானே நடுவு நின்றானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: கருவில் மிதித்த கமலப் பாதம் விரிந்து உயிராக்கும் குற்றமற்ற எனது ஆருயிர் ஆத்மா உடலளவை உருவாக்க, முன் செய்த வினைத்துயரால் உருவாய உடற்குத் துணையாக, அகார, உகாரத்தில் சுழுமுனை நாடியில் நடுவே நின்றான்.

The pure cosmic consciousness gives me life and sustains my anguished physical self,which arrangement is the result of my previous karma, yet residing in quintessential purity, flowing along the susumna Nadi of my self, sustaining me.

396. ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன் பலவான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே

பொருள்: விந்து நாதச் சேர்க்கையால் உயிரும் சகல சராசரங்களும் படைக்கப்பட்டன. பருவங்கள் தோறும் பயன் பலவாகத்தரும் சிவனை இரண்டறக் கலந்தால் பிரபஞ்சம் முழுவதும் தானாய் நிற்கும்.

The creative Impulse of the Divine Siva and Sakti(Bindu and Nadam)produced the cosmos with its manifold beings. This knowledge of the Atmic Union(creators link with the created) reveals the atmic presence every where in the phenomena.

404. ஒருவனுமே உலகேழும் படைத்தான்
ஒருவனுமே உலகேழும் அளித்தான்
ஒருவனுமே உலகேழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர்த்தானே

பொருள்: விந்து நாதத்தில் எழுந்த சக்கரத்தில் இயங்கும் ஒருவனே இறைவன். அவனே ஏழு உலகத்தைப் படைத்தும் காத்தும் அழித்தும் நிற்கின்றான். விண்ணுலகிற்கு ஆத்மா ஏறும் வழியில் ஏழு உலகங்களையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

He who is active in the Bindu-Nada chakram AUM is the creator. The sustainer and destroyer of the seven worlds. The path of the Atman is to ascend the seven worlds ilberation (Moksha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரோபவம் **Period Folowed by Dormancy with Grace Lighting up Creation**

431. உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே

பொருள்: உள்ளத்தில் இயங்கும் இறைவனை உள்ளம் விட்டு ஓரடி (கருவில் மிதித்த கமலப் பாதம்) நீங்காதிருக்கும் ஆத்ம சொரூபத்தை மனிதன் அறிவதில்லை.

The pure consciousness is the source of all life. It is the Lords feet, Aharam. Yet man is oblivious to His existence .He carries on his life without the awareness of atman. which is within his heart.

438. நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்று அங்கு இயங்கி அரன் திருமாலவன்
நன்றது செய்யும் மலர் மிசை மேல் அயன்
என்று இவராகி இசைத்திருந்தானே

பொருள்: தானாய் நின்ற ஆத்மாவே மகேஸ்வரனாய் விஷ்ணுவாய் கமலமலர் மேல் நிற்கும் பிரம்மாவாய் இசைந்திருக்கின்றான்.

The Source of creation - the pure consciousness the Atma functions as Maheswara , Vishnu, and Brahma.

மண்ணொன்று தான் பல நற்கலமாயிடும்
உள்நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
440. கண்ணொன்று தான் பல காணும் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ணம் ஆகி நின்றானே

பொருள்: ஒரே மண் பல மட்பாண்டங்கள் ஆவதுபோல், பிறப்புக்கள் எல்லாம் ஒரே ஆத்மாவே. ஊனக் கண் பல பொருட்களைக் காணும் ஆனால் தன்னைக் காணாது. அப்படியே ஊனக்கண்ணால் அண்ணலைக் காண முடியாது.

The one Atma produced all forms as the same clay produce many earthenwares The physical eye will see many things but cannot see itself, Likewise the physical eye is incapaele of seeing the Atman..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

442. உச்சியில் ஓங்கி ஒளிதிகள் நாதத்தை
நச்சியே இன்பங் கொள்வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்று உலகுக்கும்
தச்சுமவனே சமைக்க வல்லான்

பொருள்: சென்னியில் பரஞ்சோதியை வெளிப்படுத்தும் விண்ணுலக நாதத்தை அணைந்து இன்புற்றிருப்பவர்கட்குச் சாவில்லை. வியாபித்து விரிந்து பரந்திருக்கும் பெருஞ்சுடர் , மண்,வான், விண் ஆகிய மூன்று உலகங்களையும் ஊடுருவிப்போய் படைக்கவல்லவனே இறைவன்

The phenomena is alive with pure consciousness that prevades the three worlds (Man,Van and Vinloga).Fortunate are those who could enjoy the pure light at sahasrara(head) by hearing the Nada that emanates from the pure consciousness. They experience no death but liberation.

447. ஆதி படைத்தனன் ஐம் பெரும் பூதங்கள்
ஆதி படைத்தனன் ஆய பல் ஊழிகள்
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கி நின்றானே

பொருள்: விந்து நாதம் ஆகிய ஆதிப்பொருள் ஐம்பெரும் பூதங்களையும் (நிலம், நீர், தீ , காற்று, ஆகாயம்) பல பிறப்புக்களையும் எண்ணற்ற தேவர்களையும் படைத்து அவற்றைத் தாங்கி நிற்கின்றான்.

The BIndu,Nada - The source of power behind creation created the five great elements of Ether ,Fire, Air, water and Earth.Also the myrial life forms and hosts of species (yonies) and numerous Divine Entities sustaining them all.

449. உள்நின்ற சோதி உறநின்ற ஓர் உடல்
விண்நின்ற அமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்நின்ற வானோர் புகழ் திருமேனியன்
கண்நின்ற மாமணி மா போதகமே

449. பொருள்: இந்த உலகில் சோதிமயமாய் விளங்கும் பெருஞ்சக்தி வாய்ந்த ஆத்மாவே தேவர்கள் விரும்பும் மேலான விழுப்பொருளாகவும் மண்ணுலக யோகிகள் நெற்றிக்கண்ணில் உணர்ந்து ஓதும் பெருஞானமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Atma the soul force within the body is exalted by the Divine Entities (Devas) ; perceived, praised and recited by the yogis on earth (seers) is knowledge infinite itself.

450. ஆரும் அறியாத அவ் அண்டத் திருவுரு
பார் முதலாகப் பயிலும் கட்டதிலே
நீரினிற் பால்போல் நிற்கின்ற நேர்மையைச்
சேராமற்காணும் சுகம் அறிந்தேன்

பொருள்: ஆருக்கும் அறிய முடியாத விண்ணுலகத்துப் பொருளான ஒளிமயமான ஆத்மா, உடம்புக்குள்ளே பாலும் நீரும் போல் கலந்திருக்கும் உண்மையை அயர்வில்லாமல் காணும் சுகத்தை நான் அறிந்தேன்

The pure consciousness from the heavens is embodied in all beings as milk is mixed with water . I know this knowledge and enjoy this bliss at all times.

458. கர்ப்பக் கிரிகை Exercise of Immortality

ஏற எதிர்க்கில் இறைவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்
நேரொக்க வைக்கின் நிகர் போத்த தானாகும்
பேரொத்த மைந்தனும் பேர் அரசாளுமே.

பொருள்: கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து (அகாரத்திலிருந்து) எழும் பிராண வாயுவை ஏற விடாமல் சீவன் சமாதி நிலையை (இறைவனுடன் சமமாக இருக்கும் நிலை) அடைந்து இறைவனாகும் சமாதி நிலையிலிருந்து மாற எதிர்க்கில் அரியவன் தானாகும். (தெய்வநிலை) அகார. உகாரத்தில் ஏகம்பமாக ஓட வைத்தால் ஆத்மஞானியாகும் நிலை ஆத்மா அந்த நிலையில் தன்னைத்தான் ஆளும் பேரரசனாம்

The pranic power arising from the lotus Aharam if contained the stage of samadhi is experienced this being equal to the architect of creation; if from this state of Samadhi the pranic Forus (Aharam) made to rise then the state of being the sustainer of creation is reached, if this rising power of Ahara- Uharam is made to flow in a straight path ( ehambam) a stage of total comprehension is born.

466. பிண்டத்தில் உள்ளூறு பேதைப் புலன் ஐந்தும்
பிண்டத்தின் ஊடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளூறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத்தமர்ந் திருந்தானே

பொருள்: உடம்பில் இயங்கும் ஆசாபாசத்தைத் தூண்டும் ஐந்து புலன்களும் அதற்கூடாகப் பிறந்து அங்கேயே மரித்தது பெருவெளியான விண்ணுலகத்துச் சீவனும் நாதலோகத்திசையில் அமர்ந்து இருந்தான்

The five senses operate in the body at a lower physical dimension.This dimension belongs to the sense world (five senses)and experiences extinction,whereas the infinite cosmic consciousness operates on a higher celestial dimension in the NadaLoga - eternity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

485. உருவம் வளர்ந்திடும் ஒண்திங்கள் பத்தில்
பருவமதாகவே பாரினில் வந்து
மருவி வளர்ந்திடு மாயையினாலே
அருவ மதாவது இங்கு ஆரறிவாரே

பொருள்: உடம்பு பத்து மாதங்களில் தாயின் கருவில் வளர்ந்து உருவமாகி, பத்தாம் மாதத்தில் உலகில் பிறந்து மாயையோடு வளரும். அதனுள் இருக்கும் உருவமற்ற சூக்குமத்தை இங்கு யாரும் அறிவாரில்லை.

485. It takes ten months to produce the human form and the growth there after takes place in stages .This physical growth itself is an illusion because the sustaining cosmic energy behind it is unknown to the experiencing being.

488. குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்பது இல்லை
மயக்கத்தால் ஆக்கை வளர்கின்றவாறே.

பொருள்: குயில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்குக் கூடு கட்டுவதில்லை. காகம் கட்டுகின்ற கூட்டுக்குள் அதற்கும் தெரியாமல் முட்டையை இட்டுவிட்டுப் பறந்து போகும். காக்கைக்கும் தன் முட்டைக்கும் குயில் முட்டைக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. காக்கை அடைகாத்துக் குஞ்சு வளரும். அதே போன்று இந்த உடம்புள் சூக்குமப் பொருள் இருப்பதையும் அதன் இயக்கத்தினையும் போக்கையும் ஏன் எப்படி என்று அறியாத மயக்கத்தில் ( இம்மனித) உடம்பு வளர்கிறது.

In experiencing his physical dimension man is led into the belief of its own intrinsic reality He is oblivious to the cosmic being sustaining his life as the crow in its ignorance settling over the cuckoo's eggs as well as its own.

490. ஏனோர் பெருமையனாகிலும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தினுள்ளே

பொருள்: ஏனைய தோற்றங்களெல்லாம் பெரிதாகத் தோன்றினாலும், எமது இறைவன் எமது உடம்புள் அணுவாய் உட்கலந்து உள்ளான். வானுலக சஞ்சாரிகளான யோகியராலும் அறியமுடியாத ஆத்மா தன்னைத்தானே தவத்தினூடாக அறியும்.

Although the cosmic conciousness manifests in various gigantic forms, its dynamic potentialities cannot be comprehended even by the great yogis Yet our Lord the Atma is mingled in our body as an atom. Only through Tapas, the Atma can be realised.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவகைச்சீவர்க்கும் Three Fold stages of Evolution

492. சக்தி சிவன் விளையாட்டில் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத்திடை ஊட்டிச்
சுத்தமதாகும் துரியம் புரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமயமாக்குமே

பொருள்: சக்தி சிவன் சேர்க்கையால் உயிரை உண்டாக்கி, இருள் மாயைக் கூட்டத்திடை வளர்த்துச் சித்தம் துரியநிலையில் நிற்கச் சீவன் சிவனாகும்.

492. The Life Force that originated by the inter play of Sakti and Siva (static and kinetic energies of the cosmic consciousness) grows in its intrinsic states of illusionary state,waking state and dreaming state made pure in the Thuriya state, the last and final stage of becoming Siva. reaching pure consciousness.

## பாத்திரம் Instrument

503. கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்
மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்
பொய் விட்டு நானே புரிசடையான் அடி
நெய்விட்டிலாத இடிஞ்சிலுமாமே

பொருள்: கருவாகிய காலத்தும், கருவில் மிதித்த கமலப்பாதமாகிய அழியாத மெய்ப் பொருளான இறைவனாம் ஆத்மாவைக் கைவிட்டிலேன். உடம் பெண்ணத்தை விட்டு, எட்டுப்புரியையுடைய சடைத்து வியாபித்து, நெய்யின்றிச் சடைத்து எரியும் விளக்குப் போன்ற ஆத்ம சோதியை நான் தேடுவேன்.

Even at the embryonic stage,I had a grip on the activating being in me.I seek his lotus feet,the self effulgence that pervades every where like the flame sustaining self without the ghee in the lamp.

504. ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர் நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே

பொருள்: பிறப்பது பிறக்கும் இறப்பது இறக்கும் பிராணவாயு போவதும் புகுவதுமாய் இயங்குகிறது. உடம்புக்குக் காவலாய் நிற்பவன் ஆத்மா பேர் நந்தி (திருமூலனாரின் குருவின் பெயர்) தன்னைக் காட்டித்துக் கண்டவன். பெரும் விருட்சத்தின் ஒரு இளங்கிளை போன்ற ஆத்மா ஏவுவனவற்றைச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The cyclical flow of births and deaths continues. The sustaining power behind this is revealed to me by Nandi - my Guru and I realise that this Atma like a tender branch of that big tree of cosmic consciousness which fulfills all my wishes.

## அபாத்திரம் **Abuse of the Instrument**

508. மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்று அஞ்சலியத்தனாய்
எண்ணி இறைஞ்சாதார்க்கு ஈய்ந்த இருவரும்
நண்ணுவார் ஏழா நரகக் குழியிலே

*பொருள்:* மலை போன்ற பெருஞ்செல்வத்தை வறியவர்களுக்கு ஈந்தாலும், அண்ணி நிற்கும் ஆத்மா இறைவனென்று போற்றி வணங்காதார்க்குக் கொடுப்பவனும் ஏற்றுக் கொள்ளுபவனும் எழா நரகத்தில் விழுவார்.

508. The distribution of immense wealth to the poor by way of charity does not beget anything but predition to him that is ignoramt of the source of his life the Atma The giver and the receiver devoid of Atmic knowledge stands doomed.

## தீர்த்தம் - Nectar

509. உள்ளத்தினுள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக்குடைந்து நின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவர் இக்
கள்ள மனமுடைக் கல்வி இல்லோரே

பொருள்: உள்ளத்தினுள்ளே தேனூறலாகிய பல ஊற்றுக்கள் உள்ளன. அவற்றை மெள்ளக் குடைந்து நின்று வினை கெட அனுபவிக்க மாட்டார். உலக துன்பமும் இன்பமும் என்ற பள்ளம் மேடுகளில் பரந்து திரிவர். ஆத்மஞானமில்லாத கள்ள மனமுடையோர்.

The unenlightened,impervious to the great flow of Nectar within them go through life in a series of ups and downs. The seeker of truth patiently gathers these sweet nectarine flows and experiences blis.

511. உள்ளத்தினுள்ளே உணரும் ஒருவனை
கள்ளத்தினாருங் கலந்து அறிவாரில்லை
வெள்ளத்தை நாடிவிடும் அவர் தீவினை
பள்ளத்தில் உற்றதோர் பத்தல உள்ளாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உள்ளத்தினுள்ளே உள்ள ஆத்மாவை கள்ள மனமுடையவர்கள் கலந்து அறியமாட்டார்கள். அவர்களுடைய தீவினை, நிலத்திலுள்ள அழுக்கை எல்லாம் கழுவிக்கொண்டு பள்ளத்தாக்கில் விழும் நீர்ப்பாச்சலிலுள்ள கிடங்கையே நாடிவிடும்

Those ignorant of the pure consciousness within them, live is darkness and their adverse karma leads them to the lowest depths affecting their evolution.

522. செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்காள்
மெய்யே உரைக்கில் அவ் விண்ணோர் தொழச் செய்வன்
மை தாழ்ந்து இலங்கும் மணிமிடற்றோனே

பொருள்: கடல் சூழ்ந்த உலகத்தில் அழியும் மாயைப் பொருள்களைப் பற்றியே புகழ்ந்து கதைப்பதைப் படைத்தவன் அறிவான். அவர்கள் ஆத்மா இயங்கும் மெய்ப்பொருளான ஐந்தெழுத்தை உரைக்கில் அஞ்ஞான இருள் அகன்று இலங்கும் மணிமிடற்றண்ணல் அவர்களை விண்ணோரும் தொழச் செய்வன்

The creator knows that the people in this world are engrossed in their false living impervious to the truth - if they would meditate on Aum, the truth, the Lord will make even the celestials worship them.

## குரு நிந்தை Spurning the Guru

530.

பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந்தாரை உலைவன சொல்லுவர்
கற்றிருந்தார் வழி உற்றிருந்தார் அவர்
பெற்றிருந்தார் அன்றி யார் பெறும் பேறே

பொருள்: அஞ்ஞானிகள் ஞானம் பெற்றிருந் தாரையும் போற்றமாட்டார்கள் மெய்ப்பொருளான ஆத்மாவை பற்றி நின்றவர்களைப் பற்றி இழிவாய்ப் பேசித்திரிவர். ஆத்மா இயங்கும் வழியைத் தெரிந்திருந்த அவர்களையன்றி வேறுயார் அப் பேற்றைப் பெற முடியும்

The ignorant people will spurn the realised souls. They will spurn those who earnestly seek the Truth. These deprived beings will revile Truth and the seeker. They know not the Bliss experienced by those who receive the knowledge of Truth from the realised souls.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

531. ஓரெழுத்து ஒருபொருள் உணரக் கூறிய
சீரெழுத்தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊருடைச் சுணங்கனாய்ப் பிறந்து அங்கு ஓர் உகம்
பாரிடைக்கிருமியாய் படிகுவர் மண்ணிலே

பொருள்: கருவில் மிதித்த கமலப் பாதத்தைக் குறிக்கும் 'அ' கார எழுத்தின் பொருளை உணரக் கூடிய பஞ்சாட்சர மந்திரத்தை ஓதத் தெரிந்த ஆத்மஞானி வருந்தும் படி கெட்ட வார்த்தைகளைச் சொல்லுபவர்கள் ஊர் நாயாகப் பிறந்து பூமியில் ஓர் யுககாலம் கிருமிகளாய் மண்ணில் படிந்திருப்பர்.

The knowledgeable seers who meditate on AUM know the truth. Those ignorant people who revile the realised souls will be born as uncared dogs and earn the destiny of lower births. They will also be born as germs that breed in the atmosphere for millions of years, a very low state in the scale of evolution.

532. பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கிடச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே

பொருள்: ஆத்மாவின் ஒரு பாதியான சத்தியிடம் பக்திபூண்டோரினதும் தத்துவஞானிகளினதும் மனம் வருந்தும்படி தீய செயல்கள் செய்தவர்களின் ஆஸ்தியும் ஆவியும் ஆண்டொன்றில் அமிந்துவிடும். இது சத்தியம். நந்தியின் மேல் ஆணை.

Those who spurn and revile the Knowledgeable souls , the devotees of Pathini - Sakthy and cause agony to them will lose their wealth and life within one year. This I vouch in the name of Nandi- My Guru.

533. மந்திரம் ஓரெழுத்து உரைசெய்த மாதவர்
சிந்தையின் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறு உரு
வந்திடும் புலையராய் மாய்வார்கள் மண்ணிலே

பொருள்: பஞ்சாட்சர மந்திரமாய் விரிந்த தனி எழுத்தான 'அ' கார எழுத்தில் மனதைப் பதித்த பெருந்தவத்தோரின் மனம் நொந்திடத் தீமைகள் செய்தவர் நூறு பிறப்புக்கள் நாயாய் புலையராய் பிறந்து மண்ணில் மடிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Those who wound and anguish the knowledgeable, established in meditation on the word "Aharam" will be born and reborn as dogs and pulaiyar (parayar), the lowest of births.

534. ஈசன் அடியார் இதயம் கலங்கிட
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நம் நந்தி ஆணையே

பொருள்: கருவில் மிதித்த கமலப் பாதமாகிய ஈசனை அறிந்து உணர்ந்தவர்களின் இதயம் கலங்கினால், பேரரசின் மாளிகையும் குடிமக்களின் வீடுகளும் நாசம் அடையும். எனது குரு நந்தி மீது ஆணை.

Where the devotees of the Lord are put to misery by the unenlightened, the country will lose its secptre and throne and destruction of house holders will occur. This I declare in the name of My guru Nandi.

## பெரியாரைத் துணைக்கோடல் - Satsang

535. தாம் இடர்ப்பட்டுத் தளிர்போற் தயங்கினும்
மா மனதங்கு அன்பு வைத்த நிலையாகும்
நீ இடர்பட்டிருந்து என்செய்வாய் நெஞ்சமே
போமிடத்து என்னொடும் போது கண்டாயே

பொருள்: துன்பத் தீயில் மனம் வாடினாலும் (துளிர் சுட்டினால் வாடுவது போல) பக்தர்கள் மனம் இறையன்பை விட்டுமாறாது என் மனமே நீ துன்பப்பட்டு என்னசுகம் நான் போகும் ஓம் வழி புறப்பட்டு வா.

Though tortured by grief like the tender leaves in the grip of the wind the realised souls Love of the Lord is complete and unshaken Oh mind, thou art averse to know the comfort of Truth. Follow the path of Aum with me to enjoy the flow of cosmic energy within

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


545. அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவத்துவத்தை
நெறிதான் மிக மிக நின்று அருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்பமாமே

பொருள்: அமரருக்கும் தலைவனான ஆத்மாவை நாடி உணருவார். ஆத்மாவே பரமாத்மாவாய் எங்கும் செறிந்து நிற்பதை அறிந்தவர் தாம் நன்நெறியில் நின்று அருள்பவராகிய பெரியாருடன் கூடல் பேரின்பமாமே

545 Those who realise the Truth that the Lord of the Devas is the Atma and that it pervades the universe as Paramatma are the enlightened ones. It is a great Blessing to be in the company of the enlightened souls who always bestows goodness to the world

இரண்டாம் தந்திரம் முற்றிற்று

The second Tautra is concluded



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் தந்திரம் - Third Tantram
அட்டாங்க யோகம் - The eight Yoga ANgaus
இயமம் - Iyama

554. கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்து உண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடையின் நின்றானே (இயமத்தன்)

பொருள்: கொலை,களவு , கள் , காமம் முதலிய தீச் செயல்களை அகற்றி, புலன் அடக்கம், பகிர்ந்துண்ணல், தியானம் முதலியவற்றைக் கைக் கொண்டவனே ஆன்மீகப் படி ஏறத் தகுந்தவனாவான்

**Iyama:** the Pre requsites to acheive Atmic Perception consists of a Life devoid of ignoble acts of murder, robbery, addiction to intoxicants, lust etc and possess the virtues of self discipiline, magnanimity and the capacity to concentrate on the Susumna Nadi.

## நியமம் **Niyama**

555. ஆதியை வேதத்தின் அப்பொருளனைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தியோடுடன்
நீதி உணர்ந்து நியமத்தனாமே

பொருள்: வேதப்பொருளும் மூலப்பொருளுமான பரஞ்சோதி வடிவான இறைவனையும் அதிலிருந்து எழும் ஆத்ம சுடரையும், அதில் பாதியாய் பராசத்தியுடன் இணைந்த பராபரனாகிய சிவனையும் உணருதல் நியமமாகும்

Niyama: To perceive that the Atma is part of the source consciousness of the creator and that this atmic energy is made up of Sakthi and Sivam is the central knowledge to a spiritual aspirant and is termed as Nyama.

## பிராணயாமம் **Pranayama (Discipline of Breathing)**

564. ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டு ஏறுங்குதிரை மற்றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாது
பொய்யரைத் துள்ளி விழுத்திடும் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஐந்தெழுத்து மந்திரத்தில் இயங்கும் இறைவனாம் ஆத்மா, எம் உடலுக்கு நாயகன். இந்த நாயகனாம் ஆத்மா ஈடேறுவதற்குப் பிராணன் சுழுமுனை நாடியில் ஏறி இறங்க வேண்டும். இந்த நாடி ஒரு குதிரை போன்றது. இவ் ஆத்ம புரவி மெஞ்ஞானத்தை நாடுபவரை ஈடேற்றும், உலகாதய வாழ்வில் அமிழ்ந்திருப்பவரை நிலைதடுமாறச் செய்யும்.

The cosmic energy Atma, flowing in the five lettered chakara Aum is the Lord of this body. This creative energy if it flows through the susumna Nadi is like a steed that aids the seeker and if not drops the non seeker.

565. ஆரியனல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகு அறிவாரில்லை
கூரிய நான குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந்தானே

பொருள்: இடகலை பிங்கலையில் ஓடும் இறை சக்தியை சுழுமுனை நாடியில் ஓடவைக்கும் திறன் பெறாதோன் ஆத்மஞானம் அறியாதவன். செம்மையான ஞான குருவின் அருள் பெற்றால் இடகலை, பிங்கலையில் ஓடவிடாது சுழுமுனை நாடியில் பிராணனை இயக்க வல்லவனாவான்

The flow of vital pranic power normally flows along the Ida (left nostril) and Pingala (right nostril) Nadis. (Nadies are invisible pathways of air). Deeper perception and cosmic realisation comes to those who are initiated by a realised Guru, who shows the way to channel the divergent flow of Pranic power along the central Susumuna Nadi.

566. புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடையோர்க்கே..

பொருள்: பறவையிலும் வேகமாகப் பாயும் குதிரையை ஒத்த சுழுமுனை நாடியில் இயங்கும் பிராண வாயுவை நெறிப்பட உணர்ந்தால் போதை யூட்டும் கள்தரும் இன்ப உணர்விலும் மேலான இன்பத்தைத் தரும். உடற் சோர்வு அகன்று நடையிற் துடிப்புண்டாகும். இந்த உண்மையைத் திருமூலர் உணரும் தகுதி உடையோர்க்குக் கூறுகின்றார்.

The Pranic energy that flows along the Susumuna Nadi is stronger and swifter than any winged creatures or the horse, and those who perceive this pranic energy flow through meditation enjoy the bliss which no aphrodisiac can give.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

567. பிராணன் மனத்தொடு பேராது அடங்கிப்
பிராணன் இருக்கிற் பிறப்பு இறப்பு இல்லை
பிராணன் மடை மாறி பேச்சறிவித்துப்
பிராணன் அடைபேறு பெற்றுண்டீர் நீரே

பொருள்: பிராணனைத் தியானமூலம் நெறிப்படுத்துவோர் தம் மனதை ஆன்மாவில் இணைய வைப்பர். அவ் இணைப்பால் பிராணன் தன் இயல்பு பெற்று "ஓம்" எனும் பதத்திலிருந்து எழும் நாதம் கேட்கும் நிலை அடைந்து, சீவன் சிவனாகும் நிலையெய்தி பிறப்பு இறப்பைக் கடந்து நிற்பர்.

The meditative discipline of breath control creates an expansion of the human consciousness leading to a deeper perception and thus the limited Jeeva becomes the infinite Siva.

*571.* ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியதுவாமே

பொருள்: கருவில் மிதித்த கமப்பாதமாகிய "அ" கார எழுத்தில் இருந்து எழும் பிராணனை "உ" காரத்திற்கு ஏற்றியும் இறக்கியும் ஓதுவதே உணர்வதே சிவத்தொழில் ஏற்றி இறக்கும் கணக்குத் தெரிந்தவர்களுக்கு இயமனை உதைக்கும் குறி தெரியும் "ஓம்" என்னும் திருநாமத்தின் குறியே அது

The chanelling of the pranic flow along the Ahara and Uhara path. ie along the susumna Nadi, if acheived, liberates one from the Thraldam of death.

575. புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிபட உள்ளே நின்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே

பொருள்: பிராணனை ஐந்தெழுத்து இயங்கும் மார்க்கம் வழியாக நெறிப்பட வைத்தால் மும்மலமும் அகன்று உடலுறுப்புக்கள் மேன்மை பெற்று, நரை நீங்கி இறப்பிலிருந்து மீளவைக்கும்

If the pranic flow is made to flow along the Susumna Nadi, the affliction of the ego will vanish, thus return of youth and immortality is acheived.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

576. கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரற் கண்டிப்பர் நால்விரற்
கூடிக் கொளின் கோலம் அஞ்செழுத்தாமே

பொருள்: உடம்பெடுத்து சக்தியாய் ஓடிக் கொண்டிருக்கும் பிராணன் கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து ( அகாரம் -சிவம் ) பன்னிரண்டு அங்குலம் அளவிற்கு ஏறுவதும் இறங்குவதுமாய் இருக்கும். பின்னைய இரண்டு வரிகளின் விளக்கம் குருவின் துணை கொண்டே அறிய முடியும்.

The Pranic energy (Shakti) which flows in the human being, arising from the base Aharam(Mooladaram) moves up and down spanning a space of twelve inches. The subtle meaning contained in the last two lines can only be known through the mercy of a Guru.

577. பன்னிரண்டானைக்கும் பகல் இரவு உள்ளது
பன்னிரண்டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண்டானையைப் பாகன் அறிந்த பின்
பன்னிரண்டானைக்குப் பகல் இரவு இல்லையே

பொருள்: பன்னிரண்டு அங்குல அளவில் ஓடும் ஆன்மசக்தியை திருமூலர் பன்னிரண்டு யானைக் குட்டிகளுக்கு ஒப்பிட்டு, இப் பன்னிரண்டு யானை இயங்கும் இயல்பை உணராமல் மனிதர், யானையை அறியாப் பாகன் போலவே வாழ்கின்றனர். இந் நிலையில் இயங்கும் மனிதர் இன்பதுன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஆன்ம ஓட்டத்தை உணரும் மனிதன் தடைகள் விலகப்பெற்று வியாபி ஆகிறான்.

577. The flow of pranic power takes place without the knowledge of the being. Due to this , limitation joy and sorrow is experienced. Once the movement of this pranic power which is metaphorically compared to twelve elephants by Thirumular becomes known to the experient, there is complete liberation from the limitations of life.

## பிரத்தியாகாரம் Pratyahara

579. நாபிக்குங் கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்த பின்
கூவிக் கொண்டு ஈசன் குடிபுகுந்தானே

பொருள்: நாபியின் கீழ் இயங்கும் பன்னிரண்டு அங்குல அளவிலான பிராணசக்தியை நிலைப்படுத்த உதவும் மந்திரத்தை மனிதர் அறியார். இதனை அறிந்தவர் ஈசன் ( ஆத்மா) தம்முள் கூவிக்கொண்டிருப்பதை உணர்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pranic power functioning below the navel in its twelve inch span is normally unknown to humans. The device of perceiving this flow below the navel establishes a communion with the Infinite.

*586.* புறப்பட்ட வாயு புகவிடா வண்ணம்
திறப்பட்ட நிச்சயம் சேர்ந்து உடன் நின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகையானே

பொருள்: புறப்பட்டுப் போகும் பிராண சக்தியை உள்ளே இழுத்து வைத்திருக்கும் யுக்தியைக் கையாண்டு மெய்ப்பொருளுடன் மனத்தைப் பதிய வைத்து வசப்படுத்தினால் ஆத்மஞானம் ஏற்பட்டு முத்தி நிலை கைகூடும்

The pranic flow which is ever escaping via expiration, if controlled and contained within, the discerning consciousness achieves its goal, realising the Atman, releasing one from the bondage of the cycle of birth and death.

*587.* குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பு இருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென்று உணரில்
அறிப்புறு காட்சி அமரருமாமே

பொருள்: ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்துக் குறியினுள்ளே பிரபஞ்சம் தோன்றும், மெய்ப் பொருளை உணர அஞ்ஞானம் நீங்கி, இறைவனை நெருங்கும். இவ்வாறு மெய்ப்பொருளில் நாட்டம் நிலைத்து நிற்கும் பொழுது ஞான ஒளி தோன்றும்.

The Prainic power which is Atma flows in "AUM". This Aum contains the cosmos.Knowing this Ignorance dissolves and the knowledge of truth dawns, resullting in the experiencing of a cosmic expansion of consciousness

## தாரணை **Tarana**

588. கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டு ஊடே வெளியுறத்தான் நோக்கிக்
காணாக்கண் கேளாச்செவியென்று இருப்பார்க்கு
வாழ் நாள் அடைக்கும் வழியது வாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: மனதை அலைய விடாமல் அதன் போக்கை ஒரு நிலைப்படுத்தி ஆத்மா இயங்கும் வழியான சுழுமுனை நாடியில் செலுத்தும் பொழுது ஞானக்கண்ணான நெற்றிக்கண் திறபட்டு நாதலோக ஒலி உட்செவியால் கிரகிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு உயிர்நீங்கா நிலை ஏற்படும்.

Those whose concentration defies dispersal and achieves its Atmic direction of flowing along the Susumna Nadi begin to experience the deeper perception of the third eye and inner ear; such Yogis conquer death.

## தியானம் - Meditation

599. கண் நாக்குமூக்குச் செவி ஞானக் கூட்டத்துட்
பண் ஆக்கிநின்ற பழம் பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கினுள்ளே அகண்ட ஒளி காட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே

பொருள்: கண் நாக்கு மூக்குச் செவி ஆகியவற்றுடன் கூடி நிற்கும் உடம்பில் நாதத்தை ஒலித்து நிற்கும் ஆதிப்பொருளான ஆத்மா உண்டு. அது அண்ணாக்கினுள்ளே விரியும் ஆத்மசோதியைக் காட்டி, நம்மை வருத்தி, எம்மைப் பிழைப்பித்து நிற்கின்றது.

The sustaining subtle pranic power which supports the physical constitution is Aum. To the meditator the Atmic Light manifests in a particular region of the throat of the Sukshuma body. It is in this region that the life force sustains the human in fine balance

600. ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளி தன்னை
கண்ணாரப் பார்த்துக் கலந்தங்கு இருந்திடில்
விண் ஆறு வந்து வெளிகண்டிட ஓடிப்
பண்ணாமல் நின்றது பார்கலுமாமே.

பொருள்: நெற்றிக்கண்ணில் இருக்கும் ஒளியை அகக்கண்ணாற் கண்டு அதனுடன் கலந்திருந்தால், கதிர் ஒளி அலைகளின் ஓட்டம் சித்தாகாசத் திருவம்பலப் பரவெளியில் ஓடாமல் சமாதி நிலை அடைந்து இருக்கும்.

If the light manifesting in the third eye is perceived and one is immersed in it, one experiences the expansion of conciousness.

601. ஒருபொழுது உன்னார் உடலோடு உயிரை
ஒரு பொழுது உன்னார் உயிருட் சிவனை
ஒரு பொழுது உன்னார் சிவனுறை சிந்தையை
ஒரு பொழுது உன்னார் சந்திரப் பூவையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உயிர் உடலில் இருப்பதையும், உயிருக்குள் சிவன் உறைந்திருப்பதையும் சிவன் உறைந்திருக்கும் மனதையும் சித்தாகாசப் பெருவெளியில் சந்திரனைப் போன்ற பூப்போல சோதி வெளிப்படுவதையும் மக்கள் ஒரு நேரமாவது நினைப்பதில்லை

Men refuse to contemplate on the fact that their life force,their mind holds the pure consciousness.They will refuse to know the dynamic celestial plain (chithakasa space) where the culmination of their evolution takes place.

603. எண்ணாயிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டு அறிவார் இல்லை
உள் நாடி உள்ளே ஒளி பெற நோக்கிடிற்
கண்ணாடி போலே கலந்திடுவானே

பொருள்: எண்ணாயிரம் ஆண்டு யோகம் செய்தாலும் நெற்றிக்கண்ணில் அமுதத்தைக் கொடுக்கும் ஒளியானவனைக் கண்டு அறிவார் இல்லை, ஆனால் உடம்புக்குள் இருக்கும் ஆத்மாவுக்குள் தேடி, சித்தாகாசத்தில் ஆத்மசோதி வெளிப்படக் கண்டால், கண்ணாடியில் எமது உருவைக் காண்பது போல் எம்முள் அவன் கலந்திருப்பது தெரியும்.

603. Even if penance is done for many thousands of years,it is not possible to realise the Self who bestows nectar in the third eye. But if meditation on the Susumna Nadi is pursued, the flow of pure consciousness establishes communion with the Infinite in full effulgence.

*604.* நாட்டம் இரண்டும் நடு மூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஒட்டமும் இல்லை உணர்வுஇல்லை தான்இல்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே

பொருள்: இடகலை பிங்கலை இரண்டிலும் ஓடும் வாயுவை சுழுமுனை நாடியில் வைத்தால் கவலை இராது. உடம்பும் நல்லபடி இருக்கும். பிராணவாயுவின் ஓட்டமும் இருக்காது. உடலுணர்வும் இருக்கமாட்டாது, பசுத்தன்மையும் இருக்காது. சீவன் சிவனாகி விடும்.

If the pranic power flowing along the Ida and Pingala Nadies is made to flow along the central Susumna Nadi, there is release from all cares and concerns. There is an accrual of physical well being, there is an end to restlessness and jeeva becomes Siva. Life consciousness expands into the pure consciousness.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

606. மணிகடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழும் நாதங்கள் தாம் இவை பத்தும்
பணிந்தவர்க்கல்லாது பார்க்க ஒண்ணாதே

பொருள்: மணி ஓசை, கடல் ஓசை, யானையின் ஓசை, புல்லாங்குழல் ஓசை, மேளம், வீணை இன்னும் நான்கு விதமான ஓசைகள் பத்தும் ( நாதலோக ஓசை) இவை தசநாதம் எனப்படும். ஐந்தெழுத்தை ஓதி ஆத்மாவுக்குப் பணிந்த யோகியர்க்கு மட்டுமே கேட்கக் கூடியதாய் இருக்கும்.

The ten sonorous sounds of the Nada Loga is the DasaNadam which is only comprehensible by a perfect Yogi.

607. கடலொடு வேகக் களிறொடும் ஓசை
அடலொடும் அவ்வினை அண்டாண்டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல்லால் தெரியவொண்ணாதே

பொருள்: தியானத்தில் தீவிரமாக ஈடுபடும் யோகிக்கு மட்டும் தச நாதம் கேட்கும் ( நாதலோகத்து ஒலி ) மற்றவர்களுக்கு ஐம்புலனுக்கு எட்டிய ஒலி மட்டும் கேட்கும்.

Creation extends beyond the phenomena that is comprehended by the five senses. A Yogi steeped in meditation is able to hear the Dasa Nada - the sound that belongs to the Nada Loga.

609. நாத முடியிலே நல்லாள் இருப்பது
நாதமுடிவிலே நல் யோகம் இருப்பது
நாதமுடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்டகண்டனே

பொருள்: படைப்புக்குக் காரணமான விண்ணொலியான நாதத்தின் உச்சியில் இருப்பது ஆத்ம சக்தி மும்மலக் களிம்பு நீக்கி இவ் ஆத்மசக்தி அகாரத்தை அடைவதே நல்லயோகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pure consciousness Atma is at the peak of the primodial creative sound energy- Nada. The impurities of limited consciousness - ego etc cease with the ending of Nada in Aharam which is union. This process is called Yoga.

612. கொண்ட விரதங் குறையாமற்தான் ஒன்றித்
தண்டுடன் ஓடித் தலைப் பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றிலும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியாது இருக்குமே

பொருள்: கடைப்பிடித்த வைராக்கியம். குறிக்கோள், பிரணாயாமம் குறையாமல் பிரணவத்தண்டோடு சேர்ந்து இயங்கும் நிலைகண்ட யோகிக்கு, மண்,வான், விண் அனைத்தும் வியாபித்து நிற்கும் தன்மை ஏற்படும். பிறப்பற்ற நிலை உண்டாகும்

The yogi who is undisturbedly entrenched in the discipline of Pranayama, the three worlds of earth, Vanloga and Vinloga becomes accessible ending in birthlessness.

## 8. சமாதி Samadhi

## ஈசனோடு சமமான நிலை - Equal state with the Lord

619. விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமிலாத அறிவின் அரும் பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே

பொருள்: விந்துவும் நாதமும் மேருவில் இணையும் போது சமாதி கை கூடும் ஆத்மாவின் உண்மைத் தோற்றம். அதாவது அழகான பரஞ்சோதியின் சுடர் சித்தாகாச வெளியில் யோகிகளுக்குத் தெரியும்.

The Life Force that is constituted of Bindu and nadam acheives its forcus on Meru (Kailas in Vinloga), the yogi attains union with the cosmic consciousness. He also experiences the effulgence of the Paramjoti.

622. மூல நாடி முக்கட்டு அலகுச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பீர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஐந்தெழுத்தில் இயங்கும் பிராணசக்தியை அகார உகார மகாரகட்டு வழியில் சென்று மூல நாடியான சுழுமுனை நாடியில் இயக்கி, இகார, உகார, ஓங்கார,மகார முதலிய நாலு வாசல் நடுவுள் இருக்கும் யோகியர் மேலை வாசலாகிய உகார வழியால் சித்தாகாச வெளியைக் காண்பர். இந்த நிலையில் காலனின் அதிகாரம் அகன்று விடும்.

The pranic power functioning in the five lettered "AUM" if channelled along the Susumna Nadi, passing through the triangular energy field of consciousness achieves its forcus in Uharam.The meditating Yogi experiencing this repulses the lord of death.(Yaman).

628. கற்பனை அற்றுக் கனல் வழியே சென்று
சிற்பனை எல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதியோடுற்றுத்
தற்பரமாகத் தரும் தண் சமாதியே

பொருள்: சிறுமதியில் எழும் சிந்தனை அகற்றி ,சோதிவழியில் நின்று ,சகல சிரிய படைப்புக்களின் பின்னணியிலுள்ள பெருஞான பொக்கிஷத்தைச் சித்தாகாசவெளியில் உள்ள ஞானச்சந்திரனுடன் கலந்தால் சீவன் சிவனாகும் சமாதி நிலை கிட்டும்.

To eschew the thoughts which have the limited consciousness of the mind as the source and discover the dynamic intelligence behind all creations will bring to the yogi the light of deep perception and union with cosmic consciousness.

630. சோதித் தனிச்சுடராய் நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்
ஆதிப்பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந்து அன்புறு வாரே

பொருள் ஆத்மாவாக இயங்கும் இறைவனும் ஆதிப்பொருளும் உயிரும் அவனே. பிரம்மாவும் விஷ்ணுவும் அவன் அடி பணிந்து அன்பு செய்வர்

The Creator is the source, the Atma and Life. Brahma and Vishnu give loving obessance to this source of creation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

643. காலாதி பூதங் கலை கால மாயையில்
ஆயாது அகல அறிவொன்றை அனாதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலுமாமே

பொருள் உடம்புகள் முதலிய தோற்றங்களையும் சகல பஞ்ச பூதங்களின் தாண்டும் அறிவு ஏற்பட்டு செயற்பாடுகளையும் அனாதியாய் இடைவிடாது இயங்கும் நாத விந்துவாகிய மூலப் பதியில் மனதைப் பதித்தால் பரகாயம் மேவும் வியாபக சித்தி ஏற்படும்.

The state of being entrapped in the phenomena of nature the body consciousness, the play of the five great elements, the time awareness in all its neuances, if transcended the mind achives its forcus in the pure conscionsuess, Atma.All limitations disappear and the aspirant becomes Ominipotent.

649. தானே அணுவும் சகத்துத் தன் நோன்மையும்
ஆனாக் ககனமும் பரகாயத் தேகமும்
தானாவதும் பரகாயம் சேர் தன்மையும்
ஆனாத உண்மையும் வியாப்பியுமாம் எட்டே

பொருள்: தானே - தன் ஆத்மாவே, உலகத்தைப் படைத்து உலகமாய் நிற்பதையும் பாரமானதாகவும் பாரமற்றதாகவும் சகல தோற்றங்களாயும் சகல உயிராயும் மற்றயதேகங்களுள் சேரும் வல்லமையும் கொண்ட எட்டுச்சித்திகளை ஆத்மஞானி பெறுவான்

The realised soul becomes the inheritor of eight siddies as parent consciousness, as the universe, as all appearances, as life,as the sense of being weighty and weightlessness and possesed of the capacity to permeate into the consciousness of all beings.

சித்தந் திரிந்து சிவமயமாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாக ஐந்தின் தொடக்கற்றோர்
சித்தம் பரத்திற் திருநடந்தோரே

பொருள்: ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தில் ஒடித்திரிந்து முத்திநிலையுற்று ஆத்மா ஐந்தெழுத்தில் ஓடும் தொடக்கு வழப்பம் அற்றவர், ஆதியோடு நிலைபெற்று, சித்தாகாசப் பரவெளியில் பரம்பொருளோடு இணைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Those whose consciousness which flows in the five lettered energy code AUM acheives an expansion of their consciousness: Thus releasing their narrowed perceptions of appearances, and attain a state of coeval with the parent consciousness of creation.

658. ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையதோர் ஓரிடம்
ஒன்பது நாடி ஒடுங்க வல்லார்கட்கு
ஒன்பது வாசல் உலை நலமாமே

பொருள்: ஒன்பது வாசல்களைக் கொண்ட இவ் உடம்பில் ஒன்பது நாடிகள் ஆதாரமாக இயங்குகின்றன. இந்த ஆதார நாடிகளான ஒன்பது நாடிகளையும் கட்டுப்பாட்டில் வைக்கவும் வல்லமை பெற்றால் உடல், ஆரோக்கிய நிலை பெறும்.

The human body has nine passages(outlets). Two eyes, two ears, two nostrils, an anal, a genital aperture and a mouth. Behind these nine passages, functions the nine supportive Nadies. These nine Nadies, if brought under control, the human body achieves a dynamic state of well being.

661. ஓடிச்சென்றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியினுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச் சென்று அங்கே தேனை முகந்து உண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே

பொருள்: ஐந்தெழுத்தில் இயங்கி, கருவில் மிதித்த கமலப் பாதத்தைக் கண்டு. நாடியில் நாதம் எழுப்பி , அமிர்தமுண்டவர்கள், ஐம்புல விரோதியை அடக்குவர்

The consciousness which realises the base of the creative energy AUM, experiences the Nada and enjoy bliss.

665. இடையொடு பிங்கலை என்னும் இரண்டும்
அடைபடு வாயுவும் மாறியே நிற்கும்
தடையவை ஆறேழும் தண்சுடருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒருங்கே

பொருள்: இடகலை ( இடதுநாசி) பிங்கலையில் (வலது நாசி) இயங்கும் பிராண வாயுவை நடு நாடியான சுழுமுனை நாடியில் இயக்கி ஆறேழு சக்கரங்களையும் தாண்டி ஆத்மசோதியை, புருவமத்தியில் மின் ஒளிபோல் இயங்கும் மூன்றாம் கண்ணில் நிலைபெறச் செய்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let the Pranic power which flows along the invisible path ways (Nadies) of the left and right Nadies opening out into the left and right nostrils be made to flow along the central Susumna Nadi transcending the seven chakaras which will focus on the third eye of deeper perception.

667. நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
தேடி உடன் சென்று அத்திருவினைக்கைக்கொண்டு
பாடி உள்நின்ற பகவரைக் கட்டிடும்
ஆடி ஒரு கைமணி விளக்கானதே

பொருள்: சுழுமுனை நாடியில் இயங்கும் ஐந்தெழுத்து மந்திரத்தின் "ஓம்" என்னும் நாதத்தைப் பின்பற்றிச் சென்றால் ஐம் புலன்களை வெல்லும் ஆத்மசோதியான மணி விளக்கைப் பெறலாம்.

The cosmic creative energy AUM whose path if followed leads to a deeper percetion which drives away the limiting nature of the five senses.

668. அணிமாதி சித்திகளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையின் நேர்மை
இணுகாத வேகார் பலகாயமேவல்
அணுஅத்தனை எங்குந் தானாதல் என்ற எட்டே

பொருள்: அணிமா சித்திகள் - அணுப்போல் இயங்கும் பொருள்களின் எண்சித்திகளின் பரிணமிப்புக்கள், அணுவுள் அணுவாதலும் அளவற்ற பெரிதாய மெய்ப்பொருளாதலும் கனமுடையதாயும் கனமற்றதாயும் ( இலேசானதாயும்) மற்றும் உயிர்களுள் மேவும் வல்லமை உடையவனாயும் அணுபோன்ற இறைவனைத்தானே, தன் ஆத்மாவே எல்லாத் தோற்றங்களுமாய் நிற்பதே எட்டுச் சித்திகளாம்.

A realised soul will display super natural powers of an eightfold nature. To function minuter than the minutest particle of matter; the atom; to acheive an immemorable cosmic expansion; to be the sustaining hub of cosmos; to be the most weighty and the weightless, to be mightier, to permeate the consciousness of all created things; to be the possessor of infinite nature of the creator; to be the Self; to be the Atma and all appearences in creation.

666. ஒடுங்கி ஒடுங்கி உணர்ந்ங்கு இருக்கில்
மடங்கி மடங்கிடும் வாயு அதனுள்
மடங்கி மடங்கிடும் மன்னுயிர் உள்ளே
நடங் கொண்ட கூத்தனை நாடுகின்றேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: பிராணவாயுவை நெறிப்படுத்தி சுழுமுனை நாடியில் இயக்க மனம் ஒடுங்கி நெற்றிக் கண் திறபடும். நெற்றிக்கண் ஒளியிலே உயிரின் மூல சக்தியாய் திகழும் கூத்தனை ( ஆத்மாவை) நாடுகின்றேன்.

When the breath is disciplined and the pranic power is made to flow along the Susumna Nadi; the third eye of deeper perception is realised here in I seek the source consciousness.

675. மாலகுவாகிய மாயனைக் கண்டபின்
தான் ஒளியாகித் தழைத்து அங்கு இருந்திடும்
பால் ஒளியாகிப் பரந்து எங்கும் நின்றது
மேல் ஒளியாகிய மெய்ப்பொருள் காணுமே

பொருள்: இறைவனின் சூட்சும ரூபத்தை ஆத்மா அறிந்ததும் சித்தாகாச வெளியில் பரஞ்சோதியின் பிரவாகத்தைக் கண்டு மெய்ப்பொருளை உணரும்.

After knowing the subtle form of the creative consciousness, the all Pervading light of truth floods into the being.

676. மெய்ப்பொருள் சொல்லிய மெல்லியலாளுடன்
தத்பொருளாகிய தத்துவங் கூடிடக்.
கைப்பொருளாகக் கலந்திடும் ஓராண்டில்
மைப் பொருளாகு மகிமாவதாகுமே

பொருள்: ஓம் என்னும் இறை நாமத்தைச் சொல்லிய சக்தியுடன் தத்துவப் பொருளாகிய மெய்ப்பொருள் கூடும் பொழுது ஓராண்டில் அட்டமாசித்திகளில் ஒன்றாகிய மகிமா என்னும் மறைவாக இயங்கும் தன்மை நிச்சயம் ஏற்படும்.

When the Atma acheives communion with the pranic power AUM(sakthi) the yogi finds an year of such discipline confers on him the power of being invisible (Mahima-one of the eight fold powers)

677. ஆகின்ற காலொளியாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையாம்
மேல் நின்ற காலம் வெளியுற நின்றபின்
தான் நின்ற காலங்கள் தன்வதியாகுமே

பொருள்: அகார உகாரத்தில் இயங்கும் சுழுமுனை நாடிவழி சென்று சோதியைக் கண்ட பின், கால உணர்வு அற்று, ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து வழியிலே யோகிகள் நிலைத்திருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Pranic power when made to flow along the Susumna Nadi, releases the yogi from time limit. Having acheived this state, the yogi immerses steadfastly in the path of AUM.

678. தன்வழியாகத் தழைத்திடும் ஞானமும்
தன்வழியாகத் தழைத்திடும் வையகம்
தன்வழியாகத் தழைத்திடும் பொருளெல்லாம்
தன்வழிதன் அருள் ஆகி நின்றானே

பொருள்: தனக்குள் இயங்கும் ஆத்மாவின் ஐந்தெழுத்து வழியில் நின்றால் ஆத்மஞானம் உண்டாகும். இந்த மெய்யறிவு உலகுக்குச் செழிப்பைத் தரும். இந்த வழியில் வரும் பொருளெல்லாம் இறைவன் ( ஆத்மா) அருளாகப் பரிணமிக்கும்.

The pranic consciousness flowing in the five lettered AUM, when discovered by the meditating Yogi, confers on him the perception of truth and all the benificence thereof.

682. அறிந்த பராசக்தி உள்ளே அமரிற்
பறிந்தது பூதப் படையவை எல்லாம்
குவிந்து அவை ஓராண்டு கூட இருக்கில்
விரிந்த பரகாயம் மேவலுமாமே

பொருள்: ஐந்தெழுத்தை ஓதி அகார,உகார ஓம் காரியாய் விரிந்த ஆத்மாவின் ஒரு பாதியான பராசக்தியை அறிந்து ஓராண்டு உள்ளத்தில் நிலைக்க வைத்தால், உடலுணர்வு புறத்தோற்றங்கள் யாவும் நீங்கி பரகாயம் மேவல் எனும் சித்தி பெறுவர்.

If the process of meditation is done intently on AUM (Ahara - Uhara) for one year knowing and realising the pranic power as Parasakthi, the Yogi will acheive the power of Parakaya meval ie the power to permeate the consciousness of any beeing.

683. ஆன விளக்கொளி ஆவது அறிகிலர்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டு கொள்வார்கட்கு
மேலை விளக்கொளி வீடு எளிதா நின்றே

பொருள்: ஆன, அணையாத ஆதிப்பரஞ்சோதியை மனிதர் அறிவதில்லை. நெற்றிக்கண்ணில் தோன்றும் மூல ஒளியைக் கண்டயோகியர் சித்தாகாச வெளியில் வெளிப்படும் ஒளிக்கதிர் கூட்டத்தைக் கண்டு தமது ஆதி இருப்பிடமான அகாரத்தை அடைந்து முத்தி நிலை பெறுவர் ( சமாதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The incomparable light of pure consciousness is perceived in the third eye by the meditating yogi, which is unknown to most humans. Once known, the Atma acheives its true dimensions of cosmic union (Samadi).

684. நின்ற சதாசிவநாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாம்
கொண்டவை ஓராண்டு கூடி இருந்திடிற்
பண்டைய ஈசன் தத்துவமாகுமே

பொருள்: அகார உகாரத்தில் இயங்கும் பராசக்தியை உணரில், ஐம்புலன்களுக்கு அடிமைப்படும் நிலை அகலும் , பராசத்தியை அகார உகார ஓட்டத்தில் அறிந்து உணர்ந்து ஓராண்டு நிலைத்திருப்பின் ஆதி பரம் பொருளின் இறை தத்துவத்தை யோகிகள் அடைவர், அதாவது சீவன் சிவனாகும் நிலை கை கூடும்

The pranic power flowing along the Susumna Nadi (Ahara-Uharam) dispells the bond age of the five senses. If this disipline is Maintained for a period of one year The Yogi attains Samathi .The Jeeva becomes Siva

685. ஆகின்ற சந்திரன் தன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமுமாயிடும்
ஆகின்ற சந்திரன் தன் கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான் அவனாமே

பொருள்: சித்தாகாசத்தில் வெளிப்படும் ஞானச்சந்திரனே ஆத்மாவின் குளிர்ச்சியான சோதி சொரூபம் ஆகும். இந்த ஞான சந்திரனை அறியும் யோகியர் தாமே அவனாகும் நிலையை அடைவர். சீவன் சிவனாகும் நிலை

The meditating Yogi perceives the Atma as the light of pure consciousness. In this irridiscent light of emense radiance, the atma merges in union with the cosmic consciousness .Jeeva becomes Siva.

686. தானே படைத்திட வல்லவனாயிடும்
தானே அளித்திட வல்லவனாயிடும்
தானே சங்காரத் தலைவனுமாயிடும்
தானே அவனென்னும் தன்மையனாமே

பொருள்: தனக்குள் இயங்கும் ஆத்மாவே ஈசன். படைத்தல், காத்தல், அழித்தல், ஆகும் முத்தொழில்களையும் இயற்றும் வல்லமை படைத்த ஆத்மா இறைகுணங்கள் உடையவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Pranic power of pure consciousness is Atma . It has the divine Power of creation, sustenance and destruction

707. ஓதலும் ஒலிக்கும் உலகை வலம் வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயன் இல்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகர் அறிவாரே

பொருள்: கால் கடுக்க யாத்திரை மேற்கொண்டு உலகை வலம் செய்யும் புறவழிபாட்டால் யாதொரு பயனும் இல்லை. ஐந்தெழுத்து நாதத்தில் இயங்கும் ஈசனை அவன்மேல் அன்பு கொண்டோர் மட்டும் அறிவர்.

The infinite cannot be contacted by external worship such as pilgrimage and pujas . The pure consciousness functioning in the five lettered AUM enshrines Divinity . Those who earestly seek him in love discover him in AUM.

710. மதியமும் ஞாயிறும் வந்து உடன் கூடித்
துதி செய்பவராவர் தொல் வானவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடியார்க்குப்
பதியது காட்டும் பரமனின் தாளே

பொருள்: ஞானச் சந்திரனும் சூரியனும் சேர்ந்த ஒளி வடிவினர் ஆகிய இறைவனை "ஓம் " வழிச் செல்லும் வானுலக சஞ்சாரிகளான யோகியருக்கும் கருவில் மிதித்த கமலப் பாதத்தை தம்முள் கண்டு உணரும் மெய்யடியார்கட்கும் சோதி வடிவு தென்படும்.

The realised yogis who reside in vanloga perceive the effulgence of the light of pure consciousness Also the earnest seekers who perceive the path of AUM and Meditate on the Lotus feet of the Lord see this divine effulgence

கலை நிலை

712. காதல் வழி செய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழி செய்து கண்ணுற நோக்கிடில்
காதல் வழி செய்து கங்கை வழிதரும்
காதல் வழி செய்து காக்கலுமாமே

பொருள்: நெற்றிக்கண்ணில் ஒளியாய் வெளிப்படும் அன்பின் ஜோதியான இறைவனை, அன்போடு நெற்றிக்கண்ணில் நிலைபெற்று நோக்கினால் அமிர்தகங்கைப் பிரவாகம் ஏற்படும். இது ஞானியர்க்குக் காவலுமாய் நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pure consciousness of the Merciful Lord manifests in the third eye of deeper perception.If this is sought in Love, the divine flow of Nectar starts pouring and forms the armour of protection to the Yogi

716. இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு ஒளி பெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடும் சாதகனாமே

பொருள்: உலகில் இன்னும் வாழ இருக்கின்ற காலங்களை மனிதர் அறியமாட்டார். இன்னும் இருக்கப் போகின்ற காலத்தின் பெருமையை நோக்கி அழிக்கின்ற பிராண வாயுவின் ஒளி பெற நின்று, ஆத்ம தண்டுடன் ஒன்றி நிற்பான் சாதகன்.

Humans do not know how long that tenure of their life would be. The seeker of the truth brings loftiness to his future days by the meditative practice of breath control.

719. தானே எழுந்த அத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்து எம்முன்னே இருந்திடும்
வானோர் உலகு ஈன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலயமாகுமே

பொருள்: கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து தானே தனது சக்தியால் எழுந்த பராசக்தி, உடம்பை இயக்கி அதனுள் குடி கொண்டிருப்பாள் வானையும் பிரபஞ்சத்தையும் படைத்த அவளின் அருள் பெற்ற யோகியர் அமிர்தம் உண்டு, தம் உடல் சிவாலயம் ஆவதைக் காண்பர்.

The self originating power of Parasakti arising from Ahara base dwel's within the form of all beings, having created the Heavens and the Cosmos. The Yogis who establish communion with her drink nectar and get their form transformed into the living shrine of Shiva

## சரீர சித்தி Regeneration of the Human Body

724. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்படட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உடலழிந்தால் உயிர் அகன்று விடும். உயிர் அகன்றால் மெஞ்ஞானம் தேட வழியில்லை. உடம்பை வளர்க்கும் உபாயமான யோகப் பயிற்சியில் ஈடுபட்டு உடலுறுதி பெறும் வகை கண்டு உயிரை வளர்த்தேனே

The indwelling life force will leave the body once it deteriorates. When the body is in unhealthy condition it is not possible to seek the truth. The meditative discipline of yoga regenerates the body and thereby sustains the life force within it.

725. உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினுள் யான் இருந்து ஓம்புகின்றேனே

பொருள்: முன்னர் உடம்பை மெஞ்ஞான ஈடேற்றத்திற்கு ஒரு பெரும் தடையாகக் கருதினேன். ஆனால் மெய்ப்பொருளான இறைவன் அங்கே குடியிருக்கின்ற உண்மை தெரிந்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிப் பாதுகாக்கின்றேன்.

At first I deemed the human body a great obstacle to spiritual progress. Once I discovered the indwelling Life force to be the Source of power, I began to meditate on AUM, there by redeeming my body for spirltual salvation.

731. திறத்திறம் விந்து திகழும் அகாரம்
உறப்பறவே நினைந்து ஓதும் உகாரம்
மறிப்பது மந்திரம் மன்னிய நாதம்
அறப்பெற யோகிக்கு அறநெறியாமே

பொருள்: மிகத்தூய்மையான ஆதி மூலசக்தியான விந்துவிலிருந்து எழும் நாதமாகிய உகாரத்தை இயக்கி நாத முடிவை அடையும் முறையே யோக நெறியாகும்.

From the bindu, the source of power Aharam, arises Uharam. The Nadam the power of creativity. Yoga discipline cosists of Moving from Aharam to Uharam and return to the end of Nadam.

732. உந்திச் சுழியுடன் நேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந்திரத்தினால்
முந்தி முகட்டில் நிறுத்தி அபானனைச்
சிந்தித்து எழுப்பச் சிவனவனாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உந்திக் கமலத்திலிருந்து பிராணனைச் சிவமந்திரத்தால் (ஐந்தெழுத்தால்) கபாலஸ் தானத்திற்கு ஏற்றி, அங்கு நிறுத்தி, அபானனையும் அவ்வாறு சிவ மந்திரத்தால் சிந்தித்து எழுப்பினால் சீவன் சிவனாகும்.

The prana (one of the ten vital air currents) should be first lifted from the point of the Naval to the upper most region of the skull, through the meditative discipline of AUM. Then Apanan another vital pranic current should be similarly lifted from the lower region to the same point .This acheives the union of the Life force with the source consciousness

734. நீல நிறனுடையநேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென்று இருப்பார்க்கு
ஞாலம் அறிய நரை திரை மாறிடும்
பாலனுமாவர் பராநந்தி ஆணையே

பொருள்: சித்தாகாச வெளியில் சத்தியின் ஒளி நீல நிறமாய்த் தோன்றும் அவளுடன் இணைந்திருந்தால் நரை திரை வராமல் எப்பொழுதும் இளமைத் தோற்றத்துடன் இருப்பர் என்று தன் குருவாகிய நந்தியின் மேல் ஆணையிட்டுத் திருமூலர் கூறுகின்றார்.

The pranic power of the sakti is seen as BLUE hued in the realm of chittakasaveli (higher dimension) The Yogi who is constantly immersed in this pranic power of Parasakti is free of the depradation of ageing . This is vouched by the sage Thirumoolar in the name of his Guru Nandi.

748. முறை முறை ஆய்ந்து முயன்றிலராகில்
இறை இறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரணம் மற்றொன்றுமில்லை
பறையறை யாது பணிந்து முடியே

பொருள்: ஓம் என்னும் வழி நின்று முறைப்படி தேடி முயலாவிட்டால் இறைவனோடு எவருக்கும் தொடர்பு கொள்ள முடியாது. மறைந்து நிற்கும் ஐந்தெழுத்தில் இயங்கும் பொருளை உணர்வால் ஓதுவதல்லாது வேறொன்றும் இல்லை. மற்றவர்கள் பார்க்காமல் தனி இடத்தில் இருந்து தியானம் செய்.

Communion with the infinite cannot be established unless the source power functioning in the five lettered AUM is perceived throwgh meditative practice Therefore seek abosolute Solitude and engage in this discipline.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

751. ஓவியமான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயன் அறிவாரில்லை
தீவினையாம் உடன் மண்டலம் மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே

பொருள்: பிராணவாயுவின் ஓட்டத்தில் ஓவியம் போன்ற உணர்வினை தியான மூலம் அறியுங்கள். பாவம் செய்தவர்கள் இதை அறிய மாட்டார்கள் அகார உகார மகார மாகிய மண்டலங்களில் இயங்கும் பிராண சக்தியை தியான மூலம் ஆதிக்கமலத்திலிருந்து எழுவதை உணருங்கள்.

The vital power functioning in AUM is subtle blissful feeling experienced in meditation. The unfortunate many are strangers to this bliss. Their Karma is that they are unaware of that . Through. Yoga this AUM the source of power arising from the Lotus feet can be known.

752. தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்து உடல் ஒத்திடும்
கண்டவர் கண்டனர் காணார் வினைப் பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின்றாரே

பொருள்: மூன்று மண்டலங்களாக அகார உகார மகாரத்தில் இயங்கும் பிராண சக்தி சுழுமுனை நாடியில் இயங்குவதை உணரும் யோகிகள் மட்டுமே உடல் நிறைவு பெற்று ஆதிசக்தியோடு இணைந்தவராவர். மற்றையோர் தீவினைப்பயனால் இதை உணராமல் சாவெனும் சாபக்கேட்டால் உயிர்பிரியும் போது மரண வேதனையில் துடி துடிப்பர்.

The terror of death is experienced by those who do not seek the flow of the pure consciousness of AUM along the susumna Nadi. Those who are aware of this pranic flow experience a regeneration of their entire constitution and are one with the Life Force.

754. சுழல்கின்ற ஆறின் துணைமலர் காணான்
தழலிடை புக்கிடுந் தன்னுள் இலாமற்
கழல் கண்டு போம்வழி காணவல்லார்க்குக்
குழல் வழி நின்றிடுங் கூத்தனுமாமே

பொருள்: ஏழு சக்கரங்களில் இயங்கும் பிராணசக்தி கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழுந்து சோதியாய் சுழுமுனை நாடியில் இயங்கி நாதமாய் இயங்குவதை மனிதர் அறியார். தியானிகள் இந்த சிவ சோதியை உணர்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pranic power arising in Aharam flows along the six chakras comparable to rivers of energy. The Yogis perceive the pranic flow along the susumna Nadi and enjoy perfect bliss of source consciousness. Most humans are strangers to this experience

760. உயருறுவார் உலகத்தொடுங் கூடிய
பயனுறுவார் பலர்தாம் அறியாமற்
செயலுறுவார் சிலர் சிந்தையிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகிலாரே

பொருள்: உலக வாழ்க்கையில் அமிழ்ந்து பலர் செல்வத்தை ஈட்டுவர். சிலர் அதிஷ்ட வசமாக முயற்சியின்றி செல்வத்தைப் பெறுவர். சிலர் யோசனை இன்றி உலக வாழ்க்கையில் செயற்படுவர். ஆனால் இவர்கள் நெற்றிக்கண்ணில் இயங்கும் மெய்ப்பொருளான பராசக்தியின் வடிவைக் காணமாட்டார்கள்

In life many are satisied with amazing material wealth. Some are fortunate to acheive this material wealth without effort. Still others are engrossed in perpetual labour without rhyme or reason. These unfortunate people do not acheive the deeper perceplion of acquainting themselves with Parasakti's pranic flow in the third eye.

761 காணகிலாதார் கழிந்தோடிப் போவர்கள்
காணகிலாதார் நயம் பேசித் திரிவார்கள்
காணகிலாதார் கழிந்த பொருளெல்லாம்
காணகிலாமற் கழிகின்ற வாறே

பொருள்: மெய்ப்பொருளை உணராமல் வாழ்நாளை வீணாக்கி மடிந்தொழிவர், அதேபோல் வாழ்நாள் முழுவதும் நட்டம் நயம் பேசி உலக வாழ்வில் ஈடுபட்டு அழிவர். இவ்வரும் பெரும் ஆதிப் பொருளை அறியாமல் விட்டவர் அதை இழந்தவர் ஆவர்.

Those who do not perceive the source consciousness waste their days which ends in death.Also they spend their time in fruitless empty talk till their death. This great treasure escapes the ken of such people who are great losers.

762. கழிகின்ற அப்பொருள் காணகிலாதார்
கழிகின்ற அப்பொருள் காணலுமாகும்
கழிகின்ற உள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலுமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: மெய்ப்பொருளைக் கவனியாதோர் வாழ்நாளில் பிராணவாயுவை விரயம் செய்து ஒழிவர். ஆதியான மெய்ப்பொருளைத் தியானம் செய்பவர் கழியும் வாழ் நாள் அடைக்கும் உபாயத்தைக் கண்டு நிற்பர்.

The vital pranic power is expended by those who do not seek true knowledge. Those who engage in the inward discipline of meditation are able to arrest the dwindling of the life force.

764. நாடவல்லார்க்கு நமன்இல்லை கேடுஇல்லை
நாடவல்லார்கள் நரபதியாய் நிற்பர்
தேட வல்லார்கள் தெரிந்த பொருள் இது
கூட வல்லார்கட்குக் கூறலுமாமே

பொருள்: மெய்ப்பொருளைத் தேடும் வல்லமை உள்ளவர்களுக்கு மரணபயம் இல்லை. இவர்கள் ஆளுமை பெற்ற வேந்தராய்த் திகழ்வர். இதை அறிந்தவர் அறிவர். தகுதியுள்ளோருக்கு மட்டும் இந்த ஞான மார்க்கத்தை காட்டலாம்

To those who can seek the source consciousness functioning within them,there is no terror of death.Such people possess total sovereignity and are virtual rulers of men. Those who have the capacity to seek this source consciousness are able to acheive it. But the knowledge of this path to complete sovereignity of Self should not be made known to the unfit.

765. கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறும் அகாரம் குழல்வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலுமாமே

பொருள்: ஓமென்று கூறும் மெய்ப்பொருள் கருவில் மிதித்த கமலப்பாதமான அகார எழுத்திலிருந்து உகாரத்துக்கு ஏறும் பொருளாகும் பிராண சக்தியை சுழுமுனை நாடியில் இயங்க வைத்தால் சீவன் சிவனாகும்.

The vital Pranic flow rises from Ahara to Uharam. This pranic flow,if channelled along the Susumna Nadi, the life consciousness becomes source consciousness Jeeva becomes Siva.

766. அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்கட்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவன் ஆகுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஆத்மாவாய் இயங்கும் ஆதிப்பொருளான இறைவனை யாரும் அறியார். இவ் ஆதிப்பொருளைத் தியான மூலம் தெரிந்து கொள்பவர்கட்கு அவன் அவர்கள் உள்ளத்தில் நிலைத்து நிறைந்து இருப்பான். இந் நிலைகாண்பவர்க்கு சீவன் சிவனாகும்.

The Source consciousness Atma is not known to most humans.Those who commune with this source consciousness through the practice of meditation experience the indwelling infinite. The limited life consciousness becomes the unlimited source consciousness.

767. அவன் இவனாகும் பரிசு அறிவாரில்லை
அவன் இவனாகும் பரிசது கேள் நீ
அவன் இவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவன் இவன் வட்டமதாகி நின்றான்

பொருள்: ஆத்மாவே இறைவன் என்ற உண்மையை யாரும் அறிவதில்லை. கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் நாதம் இறைவனுடையதும் ஆத்மாவினுடையதுமான "ஓம்" என்னும் இசையாகும். இந்த "ஓம்" என்னும் ஓட்டத்தினுள்ளே தான் மெய்ப்பொருளை உணரலாம்.

That the Atma and the creative source is identical is unknown to many. The pranic power.arising from Aharam is the Nadam produced in both Atma and the source.

768. வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் உம்முள்ளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலீர்
ஒட்டி இருந்து உள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலுமாகுமே

பொருள்: குண்டலினி சக்தியின் ஏழு நீருலகங்களும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் ஆகிய ஏழும் பூரணநிலை பெறும் உம்முள்ளே எப்போதெனில், பிராணனின் ஓட்டத்துடன் ஒன்றி இருந்து தியானம் செய்தால், குண்டலினி சக்தியின் ஏழு நீருலகங்களும் பூரண நிலை பெற்று ஆதிக்கமலத்தைக் காணலாம்.

Find the source of your consciousness. This is found by constantly concentrating on the pranic flow, thereby the seven whorls of the kundalini gets regenerated, thus leading one to the source of pure consciousness.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

771. ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்
ஓசை இறந்தவர் ஈசனை உள்குவர்
ஓசை இறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை உணர்ந்த உணர்விது வாமே

பொருள்: ஓம் என்னும் ஓசையும் (நாதம்) ஈசனும் ஒன்றே. ஓசையை உணர்ந்தவர் அவ் ஓசை அகாரத்தில் ஒடுங்கி ஈசனோடு சமநிலையில் இருப்பதை உணர்வர் ஓம் என்னும் ஓசையை ஓதி உணர்ந்த உணர்வு இதுவே.

The Pranic flow of AUM and the creative consciousness are one and the same. Those who immerse themselves in meditative discipline of AUM reach its ultimate state of being one with the source power(samadhi).

772. ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமேல் உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே உலகில் தலைவனுமாமே

பொருள்: தமது மூலசக்தியை உள்நோக்கி உணராமல் செயற்படும் மாந்தர் அதனின் மேன்மையை உணராமல் அதைக் கழிய விடுகின்றனர். யோகிகள் தியானத்தின் மூலம் இப்பிராண சக்தி கருவில் மிதித்த கமலப் பாதத்தில் இருந்து எழுவதை உணர்ந்து பூரண ஞானம் பெற்று உலகத் தலைவரும் தாமே ஆகின்றனர்.

Most humans experience the dissipation of the vital Pranic Power as they do not seek the source of their existence. They live and die away. The meditating YOGI who disiplines his breath discovers the source consciousness through pranic flow and achieves a state of ascendency on earth.

786. ஆரும் அறியார் அளக்கின்ற வன்னியை
ஆரும் அறியார் அளக்கின்ற வாயுவை
ஆரும் அறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரும் அறியாஅறிவு அறிந்தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : தமது மூச்சே அளவு கோலாக அளக்கும் பிராண சக்தியை ஆரும் அறிவதில்லை. இச் சக்தி அவர்கள் அறியாமலே வீண்விரையமாகின்றது. ஆனால் நான் மெய்ப்பொருளாகிய "ஓம்" என்னும் இறை நாமத்தைக் கூறும் மூல அறிவை அறிந்தேன்.

The breath is the measure of the vital Pranic flow. Most humans are unaware of this and expend it wantonly. The pranic flow of AUM enshrines the source consciousness and the knowing yogi knows all.

801. இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல்லார்கட்கு
இறக்கலும் வேண்டாம் இருக்கலுமாமே

பொருள்: இடகலை, பிங்கலையில் ஓடும் பிராணசக்தியின் ஓட்டத்தை மாற்றிச் சுழுமுனை நாடியில் இயங்க வைப்பவர்களுக்குத் துன்பம் இல்லை. மாயையால் ஏற்படும் மயக்கம் நீங்கி விழிப்புணர்வு ஏற்பட்டுப் பிறப்பிறப்பு வலையைத்தைத் தாண்டி சிரஞ்சீவிகளாவர்.

The meditating Yogi who channels the pranic flow functioning along Ida and pingala nadies into the central susumna Nadi experiences complete regeneration of life, dispelling the magic swoon in mundane living and heightens his perception of things and moves into the realm of immortality.

803. நாவின் நுனியை நடுவே விசிறிடில்
சிவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்துமூவரும் தோன்றுவர்
சாவதும் இல்லை சதகோடி ஊனே

பொருள்: யோக நெறியில் செல்வோர் சுழுமுனை நாடியிற் செயற்பட்டு தம் நாவின் நுனியால் அந் நாடியினூடாக அமிர்தத்தைப் பெற்றுச் சிரஞ்சீவிகளாவர். மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவதைக் காண்பர்.

The meditating YOGI who is able to channel the pranic flow along the susumna Nadi reaches a heightening of perception and is able to enjoy nectar through the kesarimudra process and enters the realm of immortality.

804. ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகை அறிவார் இல்லை
ஊனூறல் பாயும் வகை அறிவாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளிதலுமாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: உடலில் இயங்கும் இரத்த ஓட்டம் சென்னிவரை செல்வதை அறியும் மனிதர், அதைத் தாங்கும் மூலசக்தியான அமிர்த பிரம்மத்தை அறியார். உடலை இயக்கும் மூலசக்தியை உணர்ந்த யோகியர் பரவசநிலையுற்று தேனூறலை அனுபவித்து ஞானத் தெளிவடைவர்.

The knowledge of the functioning of the blood circulating right up to the skull is known to humans. Still they are unaware of the source of power (Amirtha Bram) that sustains this blood flow in their system. The YOGI who perceives the source consciousness as being basic to all flows experience and enjoy the nectar of heavens (total knowledge).

809. ஊனீர் வழியாக உள்நாவை ஏறிட்டு
தேனீர் பருகிச் சிவாய நம வென்று
காணீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும் வழி ஆய்ந்து கொள்வீரே

பொருள்: நாவை வளைத்து தொண்டைக்குள் ஏற்றி அமுதம் பெற்று ஓம் என்னும் இறை நாமத்தை ஓதி அமுதம் வரும் வழியை ஆய்ந்து அறிவீரே. பிராணசக்தியின் உன்னத பிரவாகமாகிய அமிர்த கங்கை பெருகும்.

Contact the flow of nectar which is a Quientessential flow of the Pranic Power by process of Kesari Mudra and experience total bliss of the creative consciousness.

811. கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவன்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்குங்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினும் தீயர் அத் தீவினையாளர்க்கே

பொருள்: உள்ளமாகிய கோயிலில் குடிகொண்டிருக்கும் ஆத்மாவை உணர்பவர்கள், தரணி முழுவதற்கும் தாயினும் மேலான அன்பாளர் ஆவர். அவர்களது கோபமும் நன்மை பயக்கும் . ஆத்மஞானம் பெறாத தீவினையாளர்க்குத் தீயினும் மேலான தீயாக அவர்கள் இருப்பர்.

The Yogis whose hearts dwell in the pure consciousness of creativity is even more gentle and loving than that of a mother. Such great hearts even when agitated by anger cause only welfare. But such hearts cannot endure the worthlessness of men who ignore the presence of the creative power within them. To them they are fire of hell.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : கருவில் மிதித்த கமலப் பாதத்தில் இருந்து எழும் பிராணசக்தியை ஏழு சக்கரங்களிலும் இயங்க வைத்து எழுப்பும் மந்திரத்தை மக்கள் அறிய மாட்டார்கள். அறிந்தால் பரஞ்சோதி முன் ஆத்மசோதி தந்தைக்கு முன் மகன் போல எழுந்து நிற்கும்.

The device of making the pranic flow of source consciousness along the seven chakras is not known to many. When known, the limited consciousness achieves the expansion of source consciousness.

870. ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அத்திக்க வல்லீரெல்
வேதியன் அங்கே வெளிப்படுந்தானே

பொருள்: அகார உகாரத்தை ஓதிப்பெறும் பயனைச் சொல்லியும் அறியார் மூடர்கள். அகார உகாரத்தில் இயங்கும் விந்து நாதத்தை வழிபட முடியுமானால் வேதப் பொருளான ஆத்மா வெளிப்படும்

The ignorant will not perceive and profit in knowing the flow of source consciousness in AUM. If this is perceived in Ahara Uharam, the source consciousness is revealed as Atma.

882. உண்ணீர் அமுதமுறும் ஊறலைத் திறந்து
எண்ணீர் இணைஅடித் தாமரைக்கே செலத்
தெண்ணீர்ச் சமாதி அமர்ந்து தீரா நலக்
கண்ணாற் றொடே சென்று கால் வழி மாறுமே

பொருள்: ,தியான நெறிவழி நின்று பிராண சக்தி இயங்கும் ஓம் என்னும் ஓட்டத்தை உணர்ந்து. தேனூறலை அனுபவித்து ஆத்மாவின் இணையடியான அகாரத்தை அடைந்து பெறும் குளிர்ச்சியான நிலையில் நின்றால் நெற்றிக்கண் பிரவாகத்தில் பிராணவாயு வழி மாறும்.

The disiplining of the breath in meditation leads to the perception of the pranic source consciousness, at the point of Aharam and the Yogi experiences perception in the third eye and there occurs a cessation of breath consciousness.

மூன்றாம் தந்திரம் முற்றிற்று

**The third Tantra is Concluded.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Translation*

***Mrs. Selvam Kalyanasunderam B.A.***

*Barrister - at - Law*

*and*

***Mrs. K. Kumarasinkam***

*B. Sc (Econ) London*



*Edited and Published by :*

***Mrs. S. Kalyanasunderam***

*on behalf of Thirumoolar Sangam*

*NO. 3, RIDGEWAY PLACE*
*COLOMBO - 4, SRI LANKA.*
*TEL : 584145*

*Distributors :*

*Youth League For*
*Sanadhana Dharmic Perception*

MCLEAN PRINTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org